Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 62 | வியாழக்கிழமை 27 ஜனவரி 2022 | தை 14 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

**கொரோனா**
நேற்று 927
மொத்தம் 6,04,581

**உயிரிழப்பு**
நேற்று 16
மொத்தம் 15,346

# நீதி கோரியோர் மீது பொலிஸ் பாய்ச்சல்!

## வவுனியா மாவட்டச் செயலகம் முன்பாக நேற்றுக் களேபரம்

வவுனியா, ஜனவரி 27

நீதி அமைச்சின் "நீதிக்கான தேடல்" நடமாடும் சேவை வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற நிலையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மாவட்டச் செயலகத்தை முற்றுகையிட்டனர். அவர்களை அங்கிருந்து அகற்றப் பொலிஸார் பலப்பிரயோகத்தை மேற்கொண்டதால் அங்கு பெரும் பதற்ற நிலைமை ஏற்பட்டது. 15

## மு.ப. 11 மணிவரை வராத அதிகாரிகள்

வவுனியா, ஜன.27

வவுனியா மாவட்டச் செயலகத்தில் நீதி அமைச்சின் நடமாடும் சேவை காலை 9 மணியில் இருந்து பி.ப. 4 மணிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தபோதும், அதிகாரிகள் முற்பகல் 11 மணிக்குப் பின்னரே நடமாடும் சேவைக்கு வந்தனர் என்று கூறப்படுகின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வவுனியா மாவட்டச் செயலகத்தின் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதன்பின்னர் அவர்கள் மாவட்ட செயலகத்துக்குள் சென்று அதிகாரிகளைச் சந்திக்க முயன்றனர். 15

## மனநல ஆலோசனை வழங்குவதற்கு தயாராம்!!

காணாமல் ஆக்கப்பட்டனர் என்று கூறப்படும் நபர்களின் குடும்பத்தினருக்கு ஏதேனும் உதவிகள் அல்லது மனநல ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தயாராகவே இருக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார் நீதி அமைச்சர் அலி சப்ரி.

விரிவு
7ஆம் பக்கம்



நேற்று வவுனியா மாவட்டச் செயலகம் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் மீதும் ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலப்பிரயோகத்தை மேற்கொண்டனர்.

## கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனா தீவிரம்

கிளிநொச்சி, ஜன.27

கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரித்துள்ளது என்று தெரிவித்துள்ள சுகாதாரத் தரப்பு, பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 24ஆம் திகதி 66 கொரோனாத் தொற்றாளர்களும், 15

## வடக்கு நிர்வாகத்தில் தேய்கின்றது தமிழ்!

### அதிகாரிகளுக்கு சிக்கல்

யாழ்ப்பாணம், ஜன.27

தமிழ் மொழியை முதன்மையாகக் கொண்டு இயங்கிவந்த வடக்கு மாகாண சபை நிர்வாகம் தற்போது ஆங்கில மொழிக்கு மாற்றப்பட்டு வருவதால் அதிகாரிகளும், பொது மக்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் தமிழராக இருக்கின்றபோதும், 15

முச்சந்தி முரளி




## முடக்கத்தைத் தவிர்ப்பது பொதுமக்கள் கைகளில்!

கொழும்பு, ஜன.27

நாட்டை முடக்காமல் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தவே முயற்சிக்கின்றோம். அதற்குப் பொதுமக்களின் முழுமையான ஒத்துழைப்புத் தேவை. சுகாதார நடைமுறைகளை 15

## முடக்கத்தை நாடு தாங்காது கடும் கட்டுப்பாடுகள் தேவை

கொழும்பு, ஜன.27

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், நாட்டை மீண்டும் முடக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால் அது பெரும் தாக்கங்களுக்கு வழிவகுக்கும். 15

## சிக்கலில் மின்சாரம்!

கொழும்பு, ஜன.27

களனிதிஸ்ஸ சொஜிட்ஸ் தனியார் மின்னுற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்தி நடவடிக்கை அத்தியாவசிய திருத்தப் பணிகளுக்காக 15

## "நானே வேட்பாளர்!"

கொழும்பு, ஜன.27

நான்தான் எதிரணியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர். அடுத்த முறை ராஜபக்சக்களில் ஜனாதிபதி வேட்பாளராக யார் களமிறங்கினாலும் நான் தோற்கடித்தே தீருவேன். 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் காணி ஊடாகவே பாதை

### நேரில் சென்று உறுதிப்படுத்தினார் அங்கஜன் இராமநாதன்

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கு செல்லும் கட்டுவன் - மயிலிட்டி வீதியின் விடுவிக்கப்படாமலிருந்த 400 மீற்றர் வீதிக்குப் பதிலாக அந்தப் பகுதியில் தனியார் காணி ஊடாகவே புதிய வீதி அமைக்கப்படுவதை, யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் இ.அங்கஜன் உறுதிப்படுத்தினார். நேற்று நேரடியாகச் சென்று பார்வையிட்டபோது, இந்த விடயத்தை வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் சுட்டிக்காட்டினார்.

'பொது மக்களின் காணிகளை விடுவிப்பதற்கான ஆரம்பச் செயற்பாடாக இந்த வீதி விடுவிப்பை கருதவேண்டியது அவசியமானதாகும்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார். (ஒ-5)

# '13'ஆவது திருத்தம் வேண்டாம் என்போர் முதலமைச்சராவதற்குப் பிடுங்குப்பாடு!

### சுரேஷ் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 27

**13ஆவது திருத்தம் தமிழ் மக்களுக்கு ஏற்புடையது அல்ல என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறுகின்றது. ஆனால், வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் வேட்பாளராக வருவதில் சுகாஷ் மற்றும் காண்டீபன் ஆகியோருக்கிடையில் பிடுங்குப்பாடு நிலவுகின்றது -என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

13ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற அரசியல் தீர்வு கிடையாது.

அதில் நாம் வெளிப்படையாகவே இருக்கிறோம். ஒன்றிணைந்த தமிழ்த் தேசியக் கட்சிகளினால் இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரியுள்ளோம்.

ஆனால், தற்போது இருக்கின்ற சூழ்நிலையில் எமக்கு இருக்கின்ற குறைந்தபட்ச அதிகாரமாக 13ஆவது திருத்தமே காணப்படுகிறது. சிலர் 13ஆவது திருத்தம் தமிழ் மக்களுக்கு தேவையில்லை என போராட்டம் நடத்துவதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களிடம் நான் ஒன்றைக் கேட்கிறேன் 13ஆவது திருத்தச் சட்டம் வேண்டாம் என கூறுகின்றவர்கள் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடப் போவது எதற்கு? அதுமட்டுமல்லாது அவர்களின் கட்சிக்குள் முதலமைச்சர் வேட்பாளர் யார்? என்ற போட்டி மேலோங்கி இருக்கின்ற நிலையில் இவர்களின் நோக்கம் என்ன?

13இன் மூலம் மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை செயற்படுத்துவதற்கு, மாகாண சபையென்ற ஒன்று நடைமுறையில் இருக்க வேண்டும்.

ஆகவே 13 வேண்டாம் என மக்களைக் குழப்புவதை விடுத்து சமஷ்டியை எவ்வாறு பெறலாம் என்பதைக் கூறுங்கள். நாமும் இணைந்து பயணிக்கத் தயாராக இருக்கிறோம் - என்றார். (ம-20)



# தனியார் காணியில் கைக்குண்டு மீட்பு

சாவகச்சேரி,ஜன.27

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் வடக்குப் பகுதியில், தனியார் காணியிலிருந்து கைக்குண்டு ஒன்று நேற்று மீட்கப்பட்டது.

காணி உரிமையாளர் தனது காணியைத் துப்புரவு செய்த போது சந்தேகத்துக்கிடமான பொருளொன்றை அவதானித்துள்ளார் .

இதனை அடுத்து சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த சாவகச்சேரி பொலிஸார் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் . இதன்போது குறித்த இடத்தில் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

நீதிமன்ற அனுமதியுடன் கைக்குண்டை மீட்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ஒ-4-125)

# நில அபகரிப்பை தடுப்பதற்கான கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜன. 27

அரசின் திட்டமிட்ட நில அபகரிப்பைத் தடுப்பதற்கான கலந்துரையாடல், தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி திரேசாள் மண்டபத்தில், முற்பகல் 10 மணியளவில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

அரசின் தூரநோக்கான பௌத்தத் திணிப்பையும், நில அபகரிப்பையும் தடுப்பதற்கான பொறிமுறையை உருவாக்கும் வகையில் இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் ஆர்வமுள்ளவர்களைக் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம)

# புதிய பேருந்து நிலையத்தில் பெப்ரவரி மாதம்முதல் சேவை

### அங்கஜன் வலியுறுத்து



யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டு, சேவை இடம்பெறாமலுள்ள யாழ் புதிய பேருந்து நிலையத்தில் எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் சேவைகள் இடம்பெற வேண்டும் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வலியுறுத்தினார்.

'அரச நிதியை வீணாக்கும் வகையில், புதிய பேருந்து நிலைய இயக்கம் இடம்பெறாமலிருப்பதற்கு எவ்விதத்திலும் இடமளிக்கமுடியாது. தனியார் மற்றும் இ.போ.ச இரு தரப்பினரும் இணக்கப்பாட்டுடன் சேவைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று அங்கஜன் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட, வடமாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சிவராசா சிவபரன், 'முதற்கட்டமாக தமது சேவைகளை பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பிக்க இணக்கம் தெரிவித்ததோடு, தம்மைத்தொடர்ந்து இலங்கை போக்குவரத்துச் சபையினரும் அங்கு சேவையில் ஈடுபடவேண்டும்' எனவும் கேட்டுக்கொண்டார். இந்தவிடயம் தொடர்பில் தொழிற்சங்கத்தினருடன் கலந்துரையாடலொன்றை நடத்திய பின்னர் தமது சாதகமான நிலைப்பாட்டை தெரிவிப்பதாக இ.போ.ச. வட மாகாண பிராந்திய முகாமையாளர் செல்லத்துரை குணபாலச்செல்வம் தெரிவித்தார். (ம-20)

### யாழ். போதனா மருத்துவமனையில்

# கொரோனா விடுதிகளை மீளவும் செயற்படுத்துவது தொடர்பில் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துச் செல்லும் நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஏற்கனவே இயங்கிய கொரோனா விடுதிகளை மீளச் செயற்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று முக்கியமான கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே இந்த விடயம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கொரோனா விடுதிகள் இரண்டு இயங்கி வந்தன. தொற்றாளர்கள் எண்ணிக்கை குறைவடைந்ததைத் தொடர்ந்து அவை செயற்படவில்லை.

தற்போது தொற்றாளர்கள் எண்ணிக்கை தினசரி அதிகரித்து வருகின்றமையைத் தொடர்ந்து அவற்றை மீண்டும் முழு அளவில் செயற்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

கடந்த 4 மாத காலமாக 10க்கும் குறைவானோரே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை கொரோனா தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்று வந்தனர். தற்போது 24 பேர் வரையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். ஒட்சிசன் தேவைப்படும் தொற்றாளர்கள் எவரும் தற்போது சிகிச்சை பெற்று வரவில்லை என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-5)

# தேநீர் அருந்திய படையதிகாரி சாவு!

ஹொட்டலில் தேநீர் அருந்திக் கொண்டிருந்த ஓய்வுநிலை படை அதிகாரி ஒருவர் திடீரென உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை மிருசுவில் உசன் சந்தியில் இடம்பெற்றது. மாத்தளையைச் சேர்ந்த ஓய்வுநிலைப் படை அதிகாரியான ஜெயசிங்க (வயது 51) என்பவர் நண்பர்களுடன், ஹொட்டலில் தேநீர் அருந்திக் கொண்டிருந்தார். அவருக்கு நெஞ்சவலிப்பு ஏற்பட்டதை அடுத்து, சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். திடீர் மரண விசாரணை அதிகாரி சீ. இளங்கீரன் விசாரணை மேற்கொண்டதை அடுத்து, மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி மூலம் உடற்கூற்று பரிசோதனை நடத்தப்பட்டு, சடலம் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-4-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழக மீனவரின் படகுகள் ஏலம்

# ஆட்சியாளர்களின் சூழ்ச்சிக்கு இம்மியும் இடமளிக்காதீர்கள்!

## தமிழ் மக்கள் கூட்டணி அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 27

**கைப்பற்றப்பட்ட படகுகளை விற்பதன் மூலம் இப் பிரச்சினையைத் தடுக்கமுடியாது. எல்லைமீறிய மீனவர்களை சட்டத்தால் தண்டிக்க வாய்ப்பிருந்தும் அயலுறவின் அடிப்படையில் சட்டமா அதிபரின் விதந்துரைப்பின்கீழ் விடுதலை செய்யப்படுவதையும் நாம் அறிவோம். ஆட்சியாளரின் சூழ்ச்சிக்குப் பலியாகாமல் பிரச்சினைக்கு தீர்வுகான முயலவேண்டியது எமது கடமையாகும் - இவ்வாறு தெரிவித்துள்ளது தமிழ் மக்கள் கூட்டணி.**

இதுதொடர்பில் அந்த அமைப்பு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

தமிழக மீனவர்களின் படகுகள் ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பில் இலங்கை இந்திய அரசுகள் மற்றும் அவற்றின் சட்டங்களுக்கு அப்பால் ஈழ, தமிழக மக்களின் நல்லுறவையும், அதன் எதிர்கால முக்கியத்துவத்தையும் கவனத்திற் கொள்ளவேண்டியுள்ளது. இதில் எம்மினத்தின் எதிர்காலமும் தங்கியுள்ளது என்பதையும் எல்லோரும் கவனத்திற் கொள்ளவேண்டும்.

ஈழ, தமிழக மக்களிடையே பகைமையை வளர்ப்பதில் இலங்கை ஆட்சியாளர்கள் எப்போதுமே முனைப்பைக் காட்டிவருகின்றார்கள். கிடைக்கக்கூடிய ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் அவர்கள் தவறவிடுவதில்லை. இன்று தமிழர் ஒருவரே அந்தத்துறைக்கு அமைச்சராக இருப்பது இலங்கை அரசுக்கு மேலதிக வாய்ப்பு.

கைப்பற்றப்பட்ட படகுகளை விற்பதன் மூலம் இந்தப்பிரச்சினையைத் தடுக்கமுடியாது. எல்லைமீறிய மீனவர்களை சட்டத்தினால் தண்டிக்க வாய்ப்பிருந்தும் அயலுறவின் அடிப்படையில் சட்டமா அதிபரின் விதந்துரைப்பின்கீழ் விடுதலை செய்யப்படுவதையும் நாம் அறிவோம். ஆட்சியாளரின் சூழ்ச்சிக்குப் பலியாகாமல் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயலவேண்டியது எமது கடமையாகும்.

எனவே இதனைவிடுத்து, இழுவைப்படகுகள் உட்பட தமிழக மீனவர்களால் எமது மீனவர்கள் பாதிப்படைவதைத் தடுப்பதற்குரிய நிலையான தீர்வை எட்டுவதற்கு இருநாட்டு அரசுகளும் உடன் நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும். பிரச்சினைக்கு சுமுகமான தீர்வைக் காணவே கடற்றொழில் அமைச்சர் முயலவேண்டும் - என்றுள்ளது. (ம)

## தேவையற்ற பயணங்களை முடிந்தவரை தவிருங்கள்

### மருத்துவர் ஆலோசனை

கொழும்பு, ஜன.27

நாடு வழமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் மக்கள் தேவையற்ற பயணங்களை மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும் என்று லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் சுவாச மற்றும் குழந்தை நல மருத்துவர்கள் நிறுவகத்தின் செயலாளர் விசேட மருத்துவர் சன்ன டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

நாடு முழுவதும் ஒமிக்ரோன் திரிபு வேகமாகப் பரவி வருகின்றது. நாளாந்தம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இந்த வைரஸ் திரிபால் அதிகளவானோர் அடையாளம் காணப்படுகின்றனர்.

இந்த நிலை தொடருமானால், ஒமிக்ரோன் வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பதைத் தவிர்க்க முடியாது. இதன் மூலம் நாட்டில் அதிகளவில் பரவும் வைரஸ் திரிபாக ஒமிக்ரோன் மாற்றமடையக்கூடும்.

தற்போது பொது மக்களுக்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. நீண்ட விடுமுறை மற்றும் அதிக பயணங்களை மேற்கொள்வதன் காரணமாகத் தொற்று அதிகரித்துள்ளது - என்றார். (ஒ-4-இ)

## பூஸ்டர் டோஸை ஏற்றுவது அனைவரதும் பொறுப்பு

### அமைச்சர் டலஸ் வலியுறுத்து



கொழும்பு, ஜன.27

பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்று, அனைவரும் தமது பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும் என்று அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாட்டில் 98 வீதமானவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசியின் முதல் டோஸும், அதற்குச் சமனான வகையில் இரண்டாவது டோஸும் செலுத்தப்பட்டுள்ளன.

ஆனால், நாட்டில் இதுவரை குறைந்த வீதமானவர்களே பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். அனைவரும் மூன்றாவது டோஸைச் செலுத்தி, தமது ஆரோக்கியத்தைப் பேணவேண்டும். சிலர் பரப்பும் தவறான தகவல்கள் மற்றும் கருத்துகளால் பலர் தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதில் தயக்கம் காட்டுகின்றனர்- என்றார். (ஒ-4-இ)




வெளிநாட்டுக்குகூட போய் வந்திடலாம், ஆனால் நெடுந்தீவுக்குபோய் வாறதெண்டது எங்கட கையில இல்லை. எல்லாம் நேவியின்ர கையில தான் இருக்கு. வழக்கமா காலமை ஏழு மணிக்கு குறிகாட்டுவானில இருந்து வடதாரகைப் படகு நெடுந்தீவுக்கு வெளிக்கிடும். அப்பிடித்தான் நேர அட்டவணை போட்டிருக்கு. அதால நெடுந்தீவில வேலை செய்யிற அரச உத்தியோகத்தர்மாரும், அங்க போகவேண்டிய ஆக்களும் வடதாரகை வெளிக்கிடுற நேரத்தை கணக்குப் பார்த்துதான் போறவை. ஆனால் இப்ப அப்பிடிப் போக ஏலாது. ஏனெண்டால் இவையள் ஏழுமணிக்கு போகேக்கையே வடதாரகை முழுக்க ஆக்களால நிரம்பிப் போய் இருக்காம். கொரோனாப் பயம் சனத்திட்ட குறைஞ்சு போனதால,இவ்வளவுநாளும் அடைபட்டுக் கிடந்த சிங்களச் சனங்கள் மன வுளைச்சலை இல்லாமல் செய்ய இப்ப அடிக்கடி ரூர் எண்டு இங்க வந்து போகினம். அப்பிடி அள்ளுப் பட்டுக்கொண்டு சுற்றுலாவுக்கு வாற சிங்கள ஆக்களுக்குதான் வடதாரகையில முன்னுரிமை.

இப்பிடி ரூர் வாறவை அங்கையிருந்து வெளிக்கிட முதலே நேவிக்காரரை தொடர்புகொண்டு, வடதாரகையை 'புக்கிங்' செய்துபோட்டு வருகினமாம். பிறகு எங்கட சனம் வரமுதலே அவை வடதாரகையில ஏறிப் போய் வருகினம். சுற்றுலாக்காரர் வராட்டித் தான் எங்கட சனத்தை வடதாரகை ஏத்திறக்குது. மற்றும்படி சுற்றுலாக்காரருக்குத்தான் முன்னுரிமை. "வடதாரகையை சுற்றுலாப்பயணிகளுக்கெண்டு எழுதியாச்சோ? நாங்கள் அவசிய தேவைக்கே போய்வர ஏலாமல் இருக்கு. ஆனால் நேவிக்காரர் சுற்றுலாக்காரரை கூட்டிக்கொண்டு போய் வாறதிலதான் கண்ணும் கருத்துமா இருக்கினம். எங்களை அவை ஒரு பொருட்டா மதிக்கிறதே இல்லை" எண்டு நெடுந்தீவுச் சனங்களும், அங்க வேலைக்காக யாழ்ப்பாணத்தில இருந்து போய்வாற அரச உத்தியோகத்தர்களும் ஆதங்கப்படுகினம்.

இஞ்ச இருந்து போகேக்க வடதாரகையைத் தவற விட்டாலாவது பிறகு வெளிக்கிடுற ஏதோ ஒரு வள்ளத்தில, கொஞ்சம் பிந்தியாவது போகலாம். ஆனால் நெடுந்தீவில இருந்து பின்னேரத்தில வடதாரகை இப்பிடி சுற்றுலாக்காரரை ஏத்திக் கொண்டு கண்ட கண்ட நேரத்துக்கும் வெளிக்கிடுற தால, அங்க வேலை முடிச்சு யாழ்ப்பாணம் போகவெண்டு வாறவை ஒரு படகும் இல்லாமல் அப்பிடியே அங்கேயே தங்க வேண்டியதுதான். இப்பிடி கனநாளா வீட்டை போக வெளிக்கிட்டு, பிறகு ஒப்பீஸிலையோ இல்லாட்டி குவார்ட்டஸிலையோ இல்லாட்டி தெரிஞ்சவை வீட்டிலையோ தங்கிறது உத்தியோகத்தர்மாருக்கு தொடர்கதையாகிட்டு. எல்லாம் ஒழுங்கா , சரிவர நடக்கவேணுமெண்டுதானே நேர அட்டவணை போட்டு படகை ஓட விடுறது. இப்பிடி நேவி தான் நினைச்ச நேரம்தான் வடதாரகை ஓடுமெண்டால் பிறகு எதுக்கு நேர அட்டவணை?

அதோட வடதாரகை ஒண்டும் நேவிக்குச் சொந்தமான படகில்லை. வீதி அபிவிருத்தி அதிகார சபையின்ர படகுதான் வடதாரகை. ஆனால் 'வடதாரகையை செலுத்த சரியான ஆள் இல்லை. அதாலதான் நேவியை ஓட விடுறம்' எண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்காரர் சொல்லுகினம். மாலுமியா இருங்கோ எண்டு இடம்குடுக்க, இப்ப வடதாரகையை முழுக்க நேவியே சொந்தம் கொண்டாடுது. இதுக்கு ஒரு முடிவே இல்லையா?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘13’ தீர்வாகப்போகின்றது மக்களே கிளர்ந்தெழுக!

## சுகாஷ் அழைப்பு



**யாழ்ப்பாணம், ஜன. 27**

**தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக ‘13’ஆவது திருத்தம் முன்வைக்கப்படப்போகின்றது. இந்தக் கதையில் நாயகனாக கோத்தாபய ராஜபக்சவும், துணை நாயகர்களாக தமிழ்க் கட்சியினரும் நடித்துக் கொண்டிருக்கின்றனர் -என்று தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளரான கனகரட்ணம் சுகாஷ்.**

அரியாலையில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திடீரென தமிழ்க்கட்சிகள் இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதுகின்றார்களே என்பது தொடர்பாக இவ்வளவு காலமும் எனக்கு ஒரு சந்தேகம் இருந்தது. அண்மையில் பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா வரவிருக்கின்ற அரசமைப்பில் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு நிச்சயம் எனத் தெரிவித்திருந்தார்.

கூட்டிக்கழித்துப் பார்த்தால் எல்லாமே பொருந்துகிறது.

‘13’ஆம் திருத்தம் ஏனைய திருத்தத்திலிருந்து வித்தியாசமானது. இனப்பிரச்சினைக்கு தீர்வாக கொண்டு வரப்பட்டது இது மாத்திரமே. 13ஆம் திருத்தத்தை அறிமுகப்படுத்தியபோது விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் அதனை நிராகரித்தவேளை, இணைந்த வடக்குகிழக்குமாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள்கூட பின்னர் தமிழ் மக்களுக்கு இது தீர்வாகாது எனக்கூறினார். எவருமே அதைப்பற்றிக் கதைக்கவில்லை.

கதைப்பதற்கும் 13ஆம் திருத்தத்தில் எதுவுமே இல்லை. அந்த 13ஆம் திருத்தத்தை தற்போது 33 ஆண்டுகளுக்கு பின்னர் தூசு தட்டி எடுத்துள்ளனர். இந்த நுண்ண ரசியலை தமிழ் மக்கள் நுணுக்கமாக விளங்கி எதிர்வரும் 30ஆம் திகதி இனத்தினுடைய எதிர்காலத்துக்காக நல்லூரில் அணிதிரளவேண்டும். இல்லாவிட்டால் அந்தக் கடிதம் பெறுமதியான கடிதமாக மாற்றப்படும். இனப்பிரச்சினைக்கு தீர்வாக 13ஆவது திருத்தம் வழங்கப்படப்போகிறது. 13இனை நாங்கள் எதிர்க்காவிட்டால் எமது தலைவிதி அத்தோடு முடிந்துவிடும்.

நாங்கள் எதிர்காலத்தில் எதையும் கேட்க முடியாது.

ஏனென்றால் 13இனை நடைமுறைப்படுத்துமாறு எங்களது தலைவர்களே கடிதம் அனுப்பிவிட்டார்கள். -என்றார்.

(ம-20)

# பொதுமக்கள் சம்மதித்தால் கோபுரத்தை அமைக்கலாம்

## பிரதேசசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜன.27

தொலைத்தொடர்பு நிறுவனம் தகுந்த தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு, விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்னர், பிரதேச மக்களின் சம்மதத்துடன், தொலைத்தொடர்புக் கோபுரத்தை அமைப்பதற்கு அனுமதி வழங்க முடியும் என்று பிரதேசசபை தீர்மானித்துள்ளது.

வலி.மேற்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அராலிப் பகுதியில் தொலைத்தொடர்பு நிறுவனம் ஒன்றால், கோபுரம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, மக்களால், பிரதேச சபைக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த விடயம் சபை அமர்வின்போது விவாதிக்கப்பட்டது. கோபுரம் அமைப்பதால் நோய் நொடிகள் ஏற்படக்கூடும். சமூக ரீதியான பிரச்சினைகள் ஏற்படும் என்று மக்கள் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர். தொலைத்தொடர்புக் கோபுரம் அமைப்பதால் எந்தவித பிரச்சினைகளும் ஏற்படப்போவதில்லை. அவ்வாறெனில் நாங்கள் தொலைபேசியை பயன்படுத்தக்கூடாது. மக்களிடத்தில் விழிப்புணர்வு மேற்கொள்ள வேண்டும் என்று உறுப்பினர்கள் தெரிவித்தனர். இதற்குப் பதிலளித்த தவிசாளர், மக்களின் பிரச்சினைகளில் முதலில் கவனம் செலுத்தவேண்டும். நிறுவனத்தினரே விழிப்புணர்வுகளை மேற்கொள்ளவேண்டும். நாம் தொழில்நுட்ப வல்லுநர்கள் அல்லர். மக்கள் சம்மதித்தால் கோபுரத்தை அமைக்கலாம். -என்றார்.

(ஒ-4 -125)

# முன்னணியின் செயற்பாட்டில் திரைமறைவுப் பின்புலமுண்டு

## வினோ எம்.பி குற்றச்சாட்டு

திரைமறைவு அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு பின்னால் இருந்துகொண்டு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி செயற்படுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊடகவியலாளர் சுகிர்தராஜன் உண்மையை ஆதாரத்துடன் உலகத்துக்கும் நாட்டுக்கும் தெரியப்படுத்தியமையால் படுகொலைசெய்யப்பட்டமை யாவரும் அறிந்ததே. தமிழ்த்தேசத்தின்பால் பற்றுக்கொண்டு, ஊடகவியலாளர்கள் உழைத்துக்கொண்டிருந்த சமயம் அது தங்களது அரசியல் நடவடிக்கைக்கு சர்வதேச ரீதியாக குந்தகத்தை ஏற்படுத்தும் என்பதற்காக ஊடகவியலாளர்கள் படுகொலைசெய்யப்பட்ட தொடர்ச்சியான வரலாற்றை நாங்கள் பார்க்கின்றோம்.

அரசாங்கம் தமிழ்மக்களையும் தமிழ்க் கட்சிகளையும் மீண்டும் மீண்டும் ஏமாற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுவரும் நிலையில் நாங்கள் சர்வதேச ரீதியான ஆதரவைப் பெற்றால் மாத்திரமே புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கான நியாயமான, நீடித்து நிற்கக்கூடிய தீர்வினை பெற்றுக் கொள்ள முடியும். அதற்கு நாங்கள் ஒற்றுமைப்பட வேண்டும். நாங்கள் பிளவுபட்டிருந்தால் எமக்கான தீர்வு எட்டாக்கனியாகவே அமைவதுடன் வாழ்நாள் முழுவதும் போராடும் நிலையே ஏற்படும்.

நாங்கள் பிளவுபட்டுக் கொண்டிருப்பது தமிழ் மக்களின் சாபக்கேடாகவே இருக்கிறது. தற்போதைய சூழலில் சாத்தியமான யதார்த்த பூர்வமான தமிழ் மக்களின் தற்போதைய தேவையை நிலை நிறுத்தி தற்காலிகமாகவேனும் ஒரு தீர்வினை எட்டவேண்டும் என்பதற்காக 13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக்கோரி அனைத்துக்கட்சிகளும் கையெழுத்திட்டு ஒரு விடயத்தை அனுப்பியிருக்கின்றோம். அதனை குழப்புவதற்காக ஏதோ ஒரு திரைமறைவு அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு பின்னால் இருந்துகொண்டு தமிழ்த்தேசியமக்கள் முன்னணி செயற்படுவதை நாம் பார்க்கின்றோம். அதற்கு கூட்டமைப்பில் இருக்கின்ற, ஒற்றுமைப்பட்ட இந்தக் கட்சிகளில் இருக்கின்ற ஒரு பிரிவினரும் மறைமுகமாக ஆதரவு வழங்கும் நிலை இருக்கிறது. இதுதான் தமிழ்மக்களின் சாபக்கேடு - என்றார்.

(ம-110)

## இந்தியாவை நோக்கிய

# தமிழரின் கோரிக்கையை எதிர்க்கும் கைக்கூலிகளுக்கு இடமளியாதீர்கள்!

## தமிழ் மக்களிடம் ரெலோ கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 27

இந்தியாவை நோக்கிய கோரிக்கையின் வழியாக இலங்கை அரசின் இனவழிப்புக்கு எதிராக தந்திரோபாய நகர்வை தமிழர் தரப்பு ஒருமித்த பலத்துடன் மேற்கொண்டுள்ளது.

இதற்கு எதிராக போராட்டத்தை நடத்தி தமிழர்தரப்பை காட்டிக்கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் அரசின் கைக்கூலிகளின் நடவடிக்கைகளுக்கு இடம் அளிக்காதீர்கள் என்று கோரிக்கை விடுத்துள்ளது தமிழீழ விடுதலை இயக்கம். இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

மாகாணசபை முறைமையை முற்றுமுழுதாக நீக்கி தமிழர்களை பலம் அற்றவர்களாக ஆக்குவோம் என்ற சபதத்தோடு அரச கட்டிலில் ஏறியவர் இன்றைய ஜனாதிபதி. புதிய அரசமைப்பின் மூலம் அதை நிறைவேற்ற அவர் தயாராகி வருகிறார்.

13ஆவது திருத்தச் சட்டம் எமது அரசியல் தீர்வு அல்ல என்பதை நாம் தெட்டத் தெளிவாக கூறியுள்ளோம். நிரந்தரமான அரசியல் தீர்வை நாம் எட்டும் வரையும் மாகாணசபை முறைமை இருப்பது அவசியமாகும்.

இதை நீக்கிவிட்டாலோ அல்லது பலவீனமாக்கினாலோ தமிழர் இருப்பே இந்த நாட்டில் கேள்விக் குறியாகிவிடும்.

இதை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

மாகாணசபையின் அடித்தளமாக இருக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதே இதற்கு ஒரே வழி என்ற வகையில் பேரினவாத தென்னிலங்கை சிங்கள ஆட்சியாளர்கள் பிரசாரத்தை முன்னெடுத்து வெற்றியும் கண்டு வருகிறார்கள்.

இதற்கு வலுச்சேர்க்கும் விதமாக எமது தமிழ் இனத்திலேயே தேசியவாதிகள் என்ற போர்வையோடு இயங்கும் அரச கைக்கூலிகள் '13 எதிர்ப்பு' என்று ஒரு போராட்டத்தை அரசின் கனவுகளை நிறைவேற்றுவதற்கு சாதகமாக செயற்படுகிறார்கள்.

இவர்களை தமிழ் மக்கள் அடையாளம் கண்டு நிராகரிக்க வேண்டும்.

ஒற்றையாட்சியை எதிர்க்கிறோம் என்று கூறிக்கொண்டு அதன் கீழுள்ள பிரதேச சபைகளில் பதவிகளை பெற்றுக்கொண்டவர்கள், ஒற்றை ஆட்சியை ஏற்று சத்தியப் பிரமாணம் செய்து நாடாளுமன்ற பதவிகளை அலங்கரித்துக் கொண்டவர்கள், எதிர்க்கிறோம் எனக் கூறும் 13இல் உள்ள மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடத் தயாராகி வருகின்றார்கள். இவர்களை மக்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

இவர்களால் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான தீர்வையோ விடிவையோ பெற்றுத்தர முடியாது. தமது அரசியல் கையாலாகாத நிலையை மக்கள் அடையாளம் கண்டுவிட்டார்கள் என்பதால் வெற்றுக் கோசங்களின் மூலம் எம்மக்களை ஏமாற்ற முயலுகிறார்கள் - என்றுள்ளது.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் பணத்தை திருடியவர் அலரிமாளிகையில் இருந்து 'அவுட்'

**கொழும்பு, ஜன. 27**

**பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்குரிய வங்கிக்கணக்கிலிருந்து சுமார் மூன்றரை கோடி ரூபாவை மோசடி செய்த, பிரதம அமைச்சரின் நாடாளுமன்ற செயலாளராக செயற்பட்டவர் அலரிமாளிகையில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.**

மோசடி செய்த பணத்தை அவர் மீள ஒப்படைப்பதாக உறுதியளித்துள்ளதால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படாது என பிரதமர் தரப்பில் இருந்து அறியமுடிகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச 2005ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாக பதவி வகித்தார். எனவே, 2005ஆம் ஆண்டு முதல் அவர் வகித்த பதவிகளுக்கான சம்பளம் உள்ளிட்ட கொடுப்பனவுகள், அரச வங்கியொன்றிலுள்ள மஹிந்த ராஜபக்சவின் தனியார் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

பிரதமரின் வங்கிக்கணக்கை சோதனைக்கு உட்படுத்திய போதே இந்த மோசடி வெளிச்சத்துக்கு வந்துள்ளது. 2016 மற்றும் 2017 காலப்பகுதியிலேயே சந்தேக நபர் 'ஏ.ரி.எம்' அட்டையைப் பயன்படுத்தி பெருந்தொகைப் பணத்தை எடுத்துள்ளார்.

இவர் முன்னாள் சபாநாயகர் ஒருவரின் மகன் என்பதுடன், நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்துள்ளார். மஹிந்த ராஜபக்ச குடும்பத்துக்கு நெருங்கியவரும்கூட.

பிரதமருக்குரிய வங்கிக் கணக்கிலிருந்து இவ்வாறு மீளப்பெறப்பட்ட பணத்தை அவர் பிறி தொரு வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டுள்ளார் எனவும், அதனை மீள ஒப்படைக்க இணங்கியுள்ளதால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படாதென வும் பிரதமருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (ம-44)

## இறைவரித் திணைக்கள அதிகாரிகள் போராட்டம்

கொழும்பு,ஜன.27

உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் நேற்றுமுதல், சேவையில் இருந்து விலகி தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

உள்நாட்டு இறைவரித் திணைக்கள வளாகத்தில், அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உத்தேச சிறப்புச் சரக்கு மற்றும் சேவை வரிப் பிரேரணைக்கு எதிராக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதிகாரிகளிடமிருந்து உரிய பதில் கிடைக்கும் வரை, தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று உள்நாட்டு இறைவரி தொழிற்சங்க சம்மேளனத்தின் நிறைவேற்று உறுப்பினர் எச்.ஏ.எல்.உதயசிறி தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

## நிபந்தனைகளை ஏற்கவில்லை ஓமானின் கடன் நிராகரிப்பு

### அரசு விளக்கம்


கொழும்பு,ஜன.27

ஓமானிய அரசு விதித்த நிபந்தனைகளின் காரணமாக, எரிபொருள் கொள்வனவு செய்யும் நோக்கில், ஓமானிடம் கோரப்பட்ட 3.6 பில்லியன் அமெரிக்க டொலர் கடனைப் பெற்றுக்கொள்ளவில்லை என்று அரசு அறிவித்துள்ளது.

ஓமானிடம் ஏன் கடன் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பது தொடர்பில், அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவிக்கையில்;

அந்நியச் செலாவணி நெருக்கடி நிலைமை காரணமாக, 2021 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஓமானிடம் கடன் பெற்றுக்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

கடனுக்கான வட்டியில் சலுகை வழங்குவதற்கு, எண்ணெய் பற்றிய தேடுதல்களை மேற்கோள்ள ஓர் இடத்தை ஒதுக்கித் தருமாறு இலங்கையிடம் ஓமான் கோரியிருந்தது. எனினும் அந்தக் கோரிக்கையை இலங்கை அரசு நிராகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)



## விபத்தில் சிக்கிய மருத்துவர்கள்

யாழ்ப்பாணம்,ஜன.27


மருத்துவர்கள் சிலர் பயணித்த கார் விபத்துக்குள்ளானதில், அவர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளனர்.

இந்த விபத்து அரியாலை மாம்பழம் சந்தியில் நேற்றுமுன்தினம் இரவு 10.45 மணியளவில் இடம்பெற்றது.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த கார், அங்கிருந்த வீட்டு மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது.

யாழ்ப்பாணத்தில் ஹொட்டலில் தங்கியிருந்த மருத்துவர்கள் காரில் கிளிநொச்சி நோக்கிப் பயணித்தபோதே விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் கார் கடுமையாகச் சேதமடைந்தது. மருத்துவர்கள் சிறு காயமடைந்தனர். மயக்கமடைந்த நிலையில் இருந்த ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-4-இ)



## முட்டை விலை இறங்கியது

கொழும்பு. ஜன.27

கோழி இறைச்சி, முட்டையின் விலைகள் சந்தையில் குறைவடைந்துள்ளன என கால்நடை வளங்கள், பண்ணை மேம்பாட்டு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர் டீ.பி.ஹேரத் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

அண்மையில் 27 ரூபா வரையில் அதிகரித்திருந்த முட்டை விலை, தற்போது 21 ரூபா வரையில் வீழ்ச்சியடைந்துள்ளது. மின்வெட்டுத் தொடர்பான பிரச்சினை கால்நடைப் பராமரிப்பிலும் தாக்கம் செலுத்துகிறது. இது போன்ற நிலைமைகளில், மின்பிறப்பாக்கியைப் பயன்படுத்தி, இந்த செயற்பாடுகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அதேநேரம், இலங்கையில் முட்டை உற்பத்தியை அதிகரிக்க, தீர்வை வரியின்றி விலங்கு உணவை இறக்குமதி செய்ய நிதி அமைச்சர் அனுமதி வழங்கியுள்ளார். இதற்கமைய, தீர்வை வரியற்ற விலங்குணவுகள் கொண்டுவரப்பட்டு, பண்ணைகளுக்கு அவை வழங்கப்பட்டுள்ளன. எனவே, உற்பத்தியாளர்கள், இறைச்சி மற்றும் முட்டை என்பனவற்றின் விலைகளை தாமாகவே குறைத்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## கூட்டுறவுப் பணியாளருக்கும் ரூ. 5 ஆயிரம் கொடுப்பனவு!

### யாழ். கூட்டுறவுச் சங்கங்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 27

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைக் கருத்திற் கொண்டு, அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை கூட்டுறவுப் பணியாளர்களுக்கும் வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களின் கலந்துரையால் அண்மையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலிலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு போக்குவரத்துப் படியாக கிலோமீற்றருக்கு 10 ரூபா வழங்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. வட மாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கமும் 5 ஆயிரம் ரூபா மேலதிகக் கொடுப்பனவைக் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## உபகரணங்கள் வழங்கல்

சங்கானை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முன்பள்ளிகள், சனசமூக நிலையங்கள், இளைஞர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள் என்பவற்றுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி.விக்கினேஸ்வரனால் ஒரு தொகுதி உபகரணங்கள் நேற்று கையளிக்கப்பட்டன. விளையாட்டு உபகரணங்கள், வீதி மின்விளக்குகள், அலுமாரிகள், தளபாடங்கள், கணினி மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் என்பன இவ்வாறு வழங்கப்பட்டன. பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (வ-27)



## நினைவுரை

யாழ்ப்பாணம், ஜன. 27

தொல்புரம் கிராமத்தின் பொதுப் பணிகளில் முன்னோடியாகத் திகழ்ந்த அமரர் அ.தையல்பாகரின் நினைவுரையும் திருவுருவப் படத் திறப்பும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

தொல்புரம் சர்வோதய நிலையத்தில் மாலை 4 மணியளவில் இடம்பெறும் இந்த நிகழ்வில் சோமசுந்தரன் இராஜேந்திரம் நினைவுரையை ஆற்றவுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தை மேற்பார்வையாளரால் தொழிலாளர்களுக்கு இடையூறு

## ஆளுநருக்கு மனு

யாழ்ப்பாணம், ஜன.27

**யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட சந்தைப் பகுதியில் பணியாற்றும் சந்தை மேற்பார்வையாளர் ஒருவர், அங்கு பணிபுரியும் தொழிலாளர்களிடம் தரக்குறைவாக நடந்து கொள்வது தொடர்பில், வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில், மாநகர சபை ஊழியர்களால் மனு கையளிக்கப்பட்டது.**

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சந்தை மேற்பார்வையாளர், தொழிலாளர்களை அவதூறாகப் பேசி, அவமானப்படுத்தி, அவர்களுக்கு பெரும் சிரமத்தையும், அசௌகரியங்களையும் உருவாக்கி மன உளைச்சலுக்கு ஆளாக்கி வருகின்றார் என்று, வட பிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தினரால் போராட்டம் நடத்தப்பட்டது.

இதனையடுத்து 7 தொழிலாளர்கள் மற்றும் தொழிற் சங்கச் செயலாளர், ஆணையாளர், முதல்வரின் செயலாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் முன்னிலையில் விசாரணை நடத்தப்பட்டது. எனினும் இவருடைய குற்றங்களைக் கூறியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஒரு தொழிலாளி ஓர் அதிகாரியை அவதூறாகப் பேசினால், அவரை இடமாற்றம் செய்யும் ஆணையாளர், இவருக்கு மாற்றம் கொடுக்காமல் இருப்பதற்கான காரணம் என்ன என்பதை தொழிற் சங்கங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். -என்றுள்ளது. (ஒ-4-125)

# பெரும் இடர்கள் காலங்களில் கைகொடுத்த நிறுவனங்கள்

*மன்னார் மாவட்டச் செயலர் நன்றி தெரிவிப்பு*

மன்னார், ஜன.27

மன்னார் மாவட்டம் கடந்த வருடம் கொரோனாத் தொற்று மற்றும் வெள்ளப்பாதிப்பு என பெரும் இடர்களைச் சந்தித்த தருணத்தில், அரச சார்பற்ற நிறுவனங்கள் எமக்குக் கை கொடுத்தன. அதனால் எமது மாவட்டம் மீட்சி கண்டது என்று மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார். நடப்பு வருடத்துக்கான, அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களைப் பராமரிப்பதற்காக நிலையங்களை அமைக்க, உயர் மட்டங்களிலிருந்து அனுமதி பெற்று, அவர்கள் எமக்கு உதவிக்கரம் நீட்டினர். அதனால் மன்னாரில் கொரோனாத் தொற்றாளர்கள் பராமரிப்பை சிறந்த முறையில் மேற்கொள்ள முடிந்தது. அதேபோன்று வெள்ளப் பெருக்குக் காலத்திலும் எமக்கு உதவிகள் கிடைத்தன. அந்த வகையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிக நிதி எமது மாவட்டத்துக்குக் கிடைத்தது. இதன் மூலம் மாவட்ட மக்கள் நன்மை அடைந்தனர்.- என்றார். (ஒ-4-60)



# இந்தியக்குடியரசு தினம் யாழிலும் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஜன.27

இந்தியாவின் 73 ஆவது குடியரசு தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்திலும் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. தூதரகத்தின் பதில் துணைதூதுவர் ராம் மகேஷ்ஸனால் இந்திய தேசியக்கொடி ஏற்றப்பட்டது. தொடர்ந்து தேசியக் கீதம் இசைக்கப்பட்டு, இந்திய குடியரசுத் தலைவரின் சிறப்புரையும் வாசிக்கப்பட்டது.

தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. கொரோனாத் தொற்றுக் காலத்தில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, மட்டுப்படுத்தப்பட்ட விருந்தினர்களுடன் நிகழ்வுகள் இடம்பெற்றன.

(ஒ-4-27)



# வல்லிபுராழ்வார் ஆலயத்தில் நேர்த்திக் கடன் செலுத்தத் தடை

யாழ்ப்பாணம், ஜன.27

ஸ்ரீ வல்லிபுராழ்வார் ஆலய திருவிழாக் காலத்தில், கொரோனாத் தொற்றைக் கருத்திற் கொண்டு இந்தமுறை, நேர்த்திக் கடன்களை ஆலய வளாகத்திலும், அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் மேற்கொள்ள முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆலய மகோற்சவ கால ஏற்பாட்டுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக, பிரதேச செயலரால் அனுப்பப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலின் பிரகாரம், உரிய நேரத்தில் ஆலய உள்வளாகத்தில் 100 பக்தர்கள் பங்கேற்கலாம். ஆலய வெளி வீதியில் 200 பக்தர்கள் அனுமதிக்கப்படுவர்.

ஆலயத்துக்கு வருகை தரும் அடியவர்கள் எப்போதும் முகக்கவசம் அணிந்திருத்தல் கட்டாயமானதாகும். விசேட பேருந்துச் சேவைகளுக்கு அனுமதி இல்லை. கொரோனா அறிகுறிகள் (காய்ச்சல், தடிமன், தும்மல், இருமல் போன்றவை) காணப்படுபவர்கள் ஆலயத்துக்கு வருகை தருவதைத் தவிர்ப்பது நன்று.

ஆலயச் சுற்றாடலில் வீதிகளில் மண்டகப்படிவைத்தல், பிரசாதம் வைத்தல், தாக சாந்தி வழங்கல் போன்றவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

ஆலயச் சூழலிலுள்ள வெற்றுக் காணிகளிலோ அல்லது கட்டடங்களிலோ புதிய கடைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதுடன் நடமாடும் வியாபாரமும் அனுமதிக்கப்படமாட்டாது. ஆலயச் சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளை முறையாகப் பின்பற்ற தவறும் பட்சத்தில் அல்லது மீறுபவர்கள் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். -என்றுள்ளது. (ஒ-4-இ)

# நாவாந்துறையில் ஆயுள்வேத வைத்தியசாலை திறப்பு

யாழ்ப்பாணம், ஜன.27

நாவாந்துறை ஆயுள்வேத வைத்தியசாலைத் திறப்பு விழா யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் வைத்தியசாலையைத் திறந்து வைத்தார். மாநகர சபை உறுப்பினர் நீ.பிலிப்பின் வட்டார நிதி ஒதுக்கீட்டில் இந்த வைத்தியசாலைக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. (வ-27)

# வெளிவந்தது கலைமுகம்

கலைமுகம் கலைஇலக்கிய இதழின் 73ஆவது பிரதி வெளிவந்துவிட்டது. ஒக்ரோபர் டிசெம்பர் வரையான காலப் பகுதிக்குரியதாக இந்த 73ஆவது இதழ் அமைந்துள்ளது (ம)



# தாழிறங்கியது வட்டுவாகல் வீதி

முல்லைத்தீவு, ஜன.27

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வீதியில் முதன்மையான பாலமாக காணப்படும் வட்டுவாகல் பாலத்தின் ஒரு பகுதி தாழிறங்கியுள்ளது. நீண்டகாலமாக புனரமைக்கப்படாத பாலத்தில் அவ்வப்போது ஏற்படும் வெடிப்பு மற்றும் பாதிப்புக்கள் சீர்செய்யப்பட்டு வந்தன. தற்போது பாலத்தின் ஒருபகுதி தாழிறங்கிய நிலையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வீதியைத் தொடர்ச்சியாக கடற்றொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் நாளாந்தம் பயன்படுத்தி வருகின்றனர். எனவே போக்குவரத்தில் பாதுகாப்புக்கருதி இதனைச் சீர்செய்யவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-4-19)

# விவசாய இயந்திரங்கள் கையளிப்பு



யாழ்ப்பாணம், ஜன.27

சேதனப்பசளை மற்றும் சேதன பீடை நாசினி உற்பத்தித்திட்டத்தின் விவசாயம் சார்ந்த உள்ளீட்டு இயந்திரங்களைக் கையளிக்கும் நிகழ்வு திருநெல்வேலி விவசாயப் பண்ணை வளாகத்தில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. வடமாகாண மாவட்ட பிரதிப்பணிப்பாளர் திருமதி அஞ்சனாதேவி ஸ்ரீரங்கன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதற்கட்டமாக 15 விவசாயம் சார்ந்த தனி நபர்களுக்கும்,10 இளம் விவசாய கழக அமைப்பினர்களுக்கும் இயந்திரங்கள் கையளிக்கப்பட்டன.

வடமாகாணத்தில் எதிர்வரும் ஆண்டுகளில் தூய பசுமை நோக்கி திட்டத்தை உருவாக்கும் நோக்கில் 105 மில்லியன் ரூபா செலவில் வடமாகாண விவசாயத் திணைக்களம் இந்தச் செயற்றிட்டத்தை 5 மாவட்டங்களிலும் முன்னெடுத்துள்ளது. (வ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## வெட்கக்கேடு!

**2013** ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளராக இருந்த நவநீதம்பிள்ளை அம்மையார் முள்ளிவாய்க்காலுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களைச் சந்தித்திருந்தார். அங்கு வந்திருந்த தாய் ஒருவர், நவநீதம்பிள்ளை அம்மையாரின் முன்பாக முழங்காலிட்டு அமர்ந்து, தனது மகனின் ஒளிப்படத்தைக் காண்பித்து சில விடயங்களை உரத்துச் சொன்னார்.

'போரின் முடிவில் இராணுவத்தினரின் அறிவிப்பை நம்பி எனது மகனை நானே அவர்களிடம் (இராணுவத்திடம்) ஒப்படைத்தேன். இன்று வரை அவனைக் காணவில்லை. அவர்களிடம் ஒப்படைத்த எனது மகனுக்கு என்ன நடந்தது? எனது மகன் இல்லை என்றால் மகனை காணாமல் ஆக்கியவர்களுக்கு அல்லது கொலை செய்தவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கப்போகின்றீர்கள்?' என்பதுதான் அந்தத் தாயின் கேள்வியாக இருந்தது.

இப்போதும் போர் முடிந்து 13 ஆண்டுகள் கடந்தும், தங்கள் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக போராடும் ஒவ்வொருவரினதும் கேள்வியாக இதுவே இருக்கின்றது. அவர்களின் பிள்ளைகளுக்கு அல்லது உறவுகளுக்கு என்ன நடந்தது?

இப்போது இதைப் பிரஸ்தாபிக்கவேண்டிய தேவையை நீதி அமைச்சர் அலி சப்ரி ஏற்படுத்தியிருக்கின்றார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தங்களிடம் ஆதாரங்கள் இல்லை. அவர்களின் உறவினர்களிடம் வாக்குமூலம் பெறவேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளுக்கு இழப்பீடு வழங்குதல் மற்றும் இறப்புச் சான்றிதழ் வழங்குவதன் ஊடாக இந்த விடயத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று அவர் கூறியிருக்கின்றார்.

காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் அன்புக்குரிய உறவுகளைத் தேடும் ஒவ்வொருவருக்கும் நீதி அமைச்சரின் இந்தக் கூற்று எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றியதைப் போன்றே இருந்திருக்கும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடுபவர்கள் ஒன்றும் இறப்புச்சான்றிதழுக்காகவோ, இழப்பீட்டுக்காகவோ இன்றும் குரல் கொடுக்கவில்லை. தங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை முதலில் அறிய விரும்புகின்றார்கள். அடுத்தது அவர்கள் இல்லாமலாக்கப்பட்டிருந்தால் அதனைச் செய்தவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கப் போகின்றீர்கள் என்பதையே கேட்கின்றார்கள். அவர்கள் அன்றிலிருந்து இன்று வரை கேட்பதில் பிரதானமானது இதுதான்.

இதற்கு சிங்கள – பௌத்த பேரினவாதத் திமிரில் ஆட்சிக்கு வரும் எந்தவொரு ஆட்சியாளர்களும் திறந்த மனதுடன் – நெஞ்சுக்கு நேர்மையான – பதிலளிக்க – அணுகத் தயாரில்லை. தங்களின் போர் வெற்றி வீரர்களாக தூக்கிக் கொண்டாடும் கதாநாயகர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க அவர்கள் இம்மியும் இடம்கொடார்கள்.

அந்த ஆட்சியாளர்களுக்கு 'கூஜா தூக்கும்' வேலையை செய்யும் வகையிலேயே நீதி அமைச்சர் அலி சப்ரியின் கூற்றும் அமைந்திருக்கின்றது.


மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை நியமித்தார். அந்த ஆணைக்குழுவில் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகள் சாட்சியங்கள், வாக்குமூலங்களை வழங்கியுள்ளார்கள். இதன்பின்னர் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் ஆராயும் ஆணைக்குழு அமைக்கப்பட்டது. இதன்போது சாட்சியங்களையும், வாக்குமூலங்களையும் பதிவு செய்தார்கள். இராணுவத்தினரிடம் சரணடைவு எங்கே? எப்போது? எப்படி? நடந்தது என்பது தொடக்கம் எந்த இராணுவ அதிகாரியிடம் ஒப்படைத்தோம் என்பதுவரையில் விரிவாக விளக்கமளித்தார்கள்.

இவையெல்லாவற்றையும் மறந்து விட்டு அல்லது தமது வசதிக்கு ஏற்றவாறு தெரியாமல் நடித்துக்கொண்டு, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் ஆதாரங்கள் இல்லை; மீண்டும் வாக்குமூலம் பெறவேண்டும் என்று சொல்வதெல்லாம் பெரும் அபத்தமன்றி வேறில்லை.

இதனைவிட நீதி அமைச்சர் சப்ரி கூறிய இன்னொரு விடயம், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஐ.நாவுக்கு கையளித்த ஆதாரங்களை தாங்கள் பெற்றுக்கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டார். இலங்கையின் நீதித்துறையில் நம்பிக்கையிழந்தமையால்தான் அவர்கள் அவ்வாறு செய்தார்கள். இது நீதி அமைச்சருக்கு தன்துறை மீதான வெட்கக்கேடாகத் தெரியவில்லையா?

நாளொரு நல்வார்த்தை

"சுதந்திரம் என்பது கொடுக்கப்படுவதில்லை எடுக்கப்படுவது."
-நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்



# காணாமல் ஆக்கப்பட்டோரை தேடுவோருக்கு மனநல ஆலோசனைகளை வழங்கவும் தயார்

## நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

**கொழும்பு, ஜன. 27**

**காணாமல் ஆக்கப்பட்டதாகக் கூறப்படும் நபர்களின் குடும்பத்தினருக்கு ஏதேனும் உதவிகள் தேவைப்படும் என்றால் அல்லது மனநல ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்றால் அவற்றை ஏற்பாடு செய்யவும் தயாராகவுள்ளோம்-இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**



கொழும்பில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் தமிழ் மக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டியுள்ளது. நீண்டகாலமாக இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட தரப்புக்கு நஷ்டஈடு வழங்குவது மற்றும் காணாமல் ஆக்கப்பட்டதாக கூறப்படும் நபர்களுக்கு இறப்புச்சான்றிதழ்கள் வழங்கி இந்தப் பிரச்சினைகளை இத்துடன் நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதை ஜனாதிபதி தொடர்ச்சியாக எம்மிடத்தில் வலியுறுத்தி வருகின்றார்.

வடக்கில் காணாமல் ஆக்கப்பட்ட நபர்களின் உறவினர்களின் வாக்குமூலங்களை பெற்றுக்கொள்ள வேண்டும். ஆதாரங்களுடன் அவற்றை ஒன்று திரட்டி பாதிக்கப்பட்ட நபர்களின் குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்கத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகம் மற்றும் உத்தேச இழப்பீட்டுக்கான அலுவலகம் ஆகியவற்றைக் கொண்டு இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்க நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

**கேள்வி:** காணாமல் ஆக்கப்பட்டதாகக் கூறப்படும் நபர்கள் குறித்து சர்வதேச அமைப்புக்களிடம் உள்ள ஆதாரங்களைக் கருத்திற் கொள்வீர்களா? அல்லது தேசிய மட்டத்திலான பொறிமுறையில் இது முன்னெடுக்கப்படுமா?

**பதில் :** வடக்கில் காணாமல் ஆக்கப்பட்டதாகக் கூறப்படும் நபர்கள் பலர் குறித்து எம்மிடத்தில் ஆதாரங்கள் எதுவுமே இல்லை. ஆனால் குறித்த ஆதாரங்களை அவர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு வழங்கியுள்ளனர். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களை நாம் பெற்றுக்கொண்டுள்ளோம். அது குறித்து ஆராயப்பட்டு வருகின்றது. உண்மைகளைக் கண்டறிய வேண்டியுள்ள காரணத்தால் அவர்களின் தரவுகளைத் தேடிக்கொண்டுள்ளோம். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண வேண்டும். யார் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார் என்பது முக்கியமல்ல. காணாமல் ஆக்கப்பட்ட நபர்கள் விடுதலைப்புலிகளாக இருந்தாலும், பிரச்சினை இல்லை. அவர்களின் குடும்பத்தினருக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதையே ஜனாதிபதியும் வலியுறுத்தியுள்ளார்.

ஆகவே அதற்கான நடவடிக்கைகளை விரைவில் முன்னெடுக்கவே தற்போது வடக்கில் விசேட வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளோம் - என்றார்.

(ஒ-இ)

நாளை
28.01.2022
வெள்ளிக்கிழமை
தை 15
சுபநேரம் : 06.36 - 08.06
ராகுகாலம் : 11.06 - 12.36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன அரிசியை உண்டால் சிறுநீரக நோய் நிச்சயம்



**கொழும்பு, ஜன.27**
**சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசியை பொதுமக்கள் பயன்படுத்தினால், இலங்கையில் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று ஐக்கிய மக்கள் சக்தி எச்சரித்துள்ளது.**

இது தொடர்பில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக் அபேசிங்க தெரிவிக்கையில்:
சீனாவில் அதிகளவான இரசாயன உரங்கள் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்படுகின்றன.
இலங்கையில் ஒரு ஹெக்ரேயர் செய்கைக்கு 137 கிலோ யூரியா உரம் பயன்படுத்தப்படுகின்றது. சீனா 500 கிலோ கிராம் உரத்தைப் பயன்படுத்துகின்றது.
இரசாயன உரத்தை 34 மடங்கு அதிகமாகப் பயன்படுத்தும் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி, பாவனைக்கு பாதுகாப்பற்றது.
இலங்கையில் நாளாந்தம் 6.5 மில்லியன் கிலோகிராம் அரிசி நுகரப்படும், அதேவேளை 3.5 மில்லியன் பாணும் நாளாந்தம் உட்கொள்ளப்படுகின்றது. தரமற்ற உணவை உட்கொள்வதால் சிறுநீரக நோய் ஏற்படும் - என்றார். (ஒ-4-இ)

## நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு வராது

### அமைச்சர் உறுதி



கொழும்பு.ஜன.27
"சந்தையில் அரிசியின் விலையை அதிகரித்து, நெருக்கடி நிலைமையை ஏற்படுத்த அரிசி மாபியாக்கள் முன்னெடுத்த சூழ்ச்சியைத் தடுப்பதற்கும், அரிசியின் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்குமே அரிசி இறக்குமதி செய்யப்படுகின்றது. நாட்டில் அரிசிக்கான தட்டுப்பாடு எந்தக் காரணத்தாலும் ஏற்படாது" என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
விவசாய அமைச்சால் வழங்கப்பட்ட 4 வகையான சேதனப்பசளை மற்றும் சேதன திரவ உரம் ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தியவர்களுக்கு மாத்திரம் நஷ்டஈடு வழங்கப்படும் என்ற வரையறை கிடையாது. நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் தாம் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கப் பெறவில்லை எனக் கருதும் பட்சத்தில் அவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும். பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நஷ்டஈடு வழங்கப்படும் - என்றார். (ஒ-4-இ)

## பதவி விலகினார் கமநலக் காப்புறுதி சபைத் தலைவர்

கொழும்பு, ஜன.27
விவசாய மற்றும் கமநலக் காப்புறுதி சபையின் தலைவர் சட்டத்தரணி பிரேமச்சந்திர ஏபா தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.
அவரின் பதவி விலகல் கடிதம் விவசாய அமைச்சருக்கு நேற்று முன்தினம் அனுப்பப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. சமீபத்தில், ஊழியர்கள் அவருக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## நெல்லுக்கு நிர்ணய விலை: விவசாயிகள் ஏற்க மறுப்பு

கொழும்பு.ஜன.27
ஒரு கிலோகிராம் நெல்லுக்கான நிர்ணய விலையான 75 ரூபாவை ஏற்க, விவசாயிகள் தயார் இல்லை என்று அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.
நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோகிராம் நெல் 75 ரூபாவுக்குக் கொள்வனவு செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளது.
இது தொடர்பில் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன தெரிவிக்கையில்;
விவசாய சமூகத்துக்கு ஏற்பட்ட அனைத்து இழப்புக்களின் பின்னரும், நிர்ணய விலையை முன்மொழிவது நியாயமானதல்ல. விவசாயிகள் உரிய உரத்தைப் பயன் படுத்தி ஒரு கிலோகிராம் நெல் உற்பத்தி செய்வதற்கு முன்னரை விட இப்போது அதிகமாக செலவாகும். விவசாயிகள் ஒரு மூடை உரத்தை 15 ஆயிரம் ரூபா முதல் 20 ஆயிரம் ரூபாவுக்கு வாங்குகின்றனர்.
ஒரு கிலோகிராம் நெல் உற்பத்திச் செலவு 75 ரூபாவுக்கு அதிகமாக உள்ளதால், ஒரு கிலோ நெல்லின் விலை 100 ரூபாவாக அதிகரித்துள்ளது.
எனவே விவசாயிகளுக்கு நியாயமான தீர்வை வழங்க வேண்டும். அரிசியின் விலை அதிகரிக்காமல், நுகர்வோருக்கு சுமையை ஏற்படுத்தாமல் பார்த்துக் கொள்வது அரசின் பொறுப்பாகும்.
அதேவேளை, நெல் விவசாயிகளுக்கு மாத்திரமன்றி உர நெருக்கடியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் - என்றார். (ஒ-4-இ)



## தரமற்ற பாலம் மறுசீரமைப்பு

மன்னார்,ஜன.27
மன்னார் நானாட்டானில் தரமற்ற முறையில் அமைக்கப்பட்டிருந்த மடுக்கரை பிரதான பாலம் மீண்டும் மறுசீரமைக்கப்படுகின்றது.
இதனை வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் வடக்கு மாகாண அதிகாரிகள் நேற்றுமுன்தினம் பார்வையிட்டனர்.
மடுக்கரை மற்றும் பல கிராமங்களுக்குச் செல்லும் பிரதான பாலம், கடந்த வருடம் பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டது.
இதன் தரம் குறித்து, கிராம மக்கள் ஊடகங்கள் மூலம் சுட்டிக்காட்டியதை அடுத்து, வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் வடக்கு மாகாணத்தைச் சார்ந்த அதிகாரிகள் குறித்த பாலம் உரிய முறையில் மறுசீரமைக்கப்படும் என்று தெரிவித்திருந்தனர்
அதனடிப்படையில் மடுக்கரை பிரதான பாலத்தின் வேலைத்திட்டங்கள் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் வடக்கு மாகாண அதிகாரிகள் முன்னிலையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஒ-4-213)



## சட்டவிரோதமாக மணல் அகழ்வு: 5 உழவு இயந்திரங்கள் பறிமுதல்

கிளிநொச்சி.ஜன.27
தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்மடுக்குளம் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட 5 உழவு இயந்திரங்கள் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டன.
விசுவமடு இராணுவத்தினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, கல்மடுக்குளம் நெத்தலியாற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.
இதன்போது மணல் அகழ்வில் ஈடுபட்ட 5 உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றின் சாரதிகள் ஐவரும் மணல் ஏற்றிய 4 சந்தேகநபர்களும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் தருமபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4-113)

## தருமபுரம் மக்களின் தேவைகள் ஆராய்வு

கிளிநொச்சி.ஜன.27
தருமபுரம்மேற்கு, கிழக்குப் பகுதி மக்களின் தேவைகள் தொடர்பில், பொது அமைப்பு பிரதிநிதிகளுடன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேட்டறிந்தார்.
தருமபுரம் மருத்துவமனையில் நிலவும், மருத்துவர் பற்றாக்குறை மற்றும் ஏனைய வசதிகள், மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம், உள்ளக வீதிகள் புனரமைப்பு, வீட்டுத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமை உள்ளிட்ட தேவைகள், குறைபாடுகள் தொடர்பில் பிரதிநிதிகள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் எடுத்துக் கூறினர். (ஒ-4-113)

## ஊழல் சுட்டெண்ணில் இலங்கை பின்னடைவு

கொழும்பு.ஜன.27
ஊழலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கும் நாடுகளின் பட்டியலில், இலங்கை பின்தங்கி யுள்ளது என்று ட்ரான்ஸ்பரன்சி இன்ரர்நஷனல், வெளியிட்டுள்ள ஊழல் புலனாய்வுச் சுட்டெண்ணில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தச் சுட்டெண்ணில், 2020 ஆம் ஆண்டு 94 ஆவது இடத்தில் இருந்த இலங்கை 2021 ஆம் ஆண்டில் 102 ஆவது இடத்துக்குப் பின்தங்கியுள்ளது.
அரச துறை ஊழல் பற்றிய அறிக்கைகளின் அடிப்படையில், நிபுணர்கள் மற்றும் வணிகர்களின் கருத்துக் கணிப்புகளையும் கொண்டு உலகெங்கிலும் உள்ள 180 நாடுகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.
கடந்த 10 ஆண்டுகளில், 2012 ஆம் ஆண்டில் அதிபட்சமாக 40 மதிப்பெண்களைப் பெற்ற இலங்கை, 2006 ஆம் ஆண்டில் குறைந்த பட்சமாக 36 மதிப்பெண்களைப் பெற்றது.
கடந்த வருடத்தில் டென்மார்க், பின்லாந்து, நியூஸிலாந்து ஆகிய நாடுகள் தலா 88 புள்ளிகளுடன் முதலிடத்திலும், தெற்கு சூடான் 11 புள்ளிகளுடன் கடைசி இடத்திலும், சோமாலியா மற்றும் சிரியா தலா 13 புள்ளிகளிகளுடன் கடைசிக்கு முதல் இடங்களிலும் உள்ளன என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இந்தியாவின் 73 ஆவது குடியரசு தினம் நேற்றுக் கொண்டாடப்பட்டது. இதன்போது குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் டில்லி ராஜபாதையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து டில்லியில் இராணுவ மற்றும் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்புகள் இடம்பெற்றன.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 . 07 . 1951



உதிர்வு 08 . 01 . 2021

## நகுலராஜா சிவமலர் (மலர்)

அம்மா அம்மா
நீங்கள் எங்கே அம்மா?
தவியாய் தவிக்கின்றோம் அம்மா!
எந்த நேரமும் என் பிள்ளைகள்
என் பிள்ளைகள் என்று ஏங்கிக்
கொண்டிருப்பீர்கள் அம்மா!
அதே ஏக்கம் தான் நமக்கும் அம்மா!
நம் ஐவர் ஒருவரின் கண்களில் நீர்
வடிந்தால் கூட உமது நெஞ்சில்
உதிரம் கொட்டும் அம்மா!
அதை நாம் உணர்ந்தோம் அம்மா
கண் இமைக்காது எம்மை காவல் புரிந்து
பண்பும், பாசமும் அரவணைப்பும் காட்டி
நல்வழி நடத்திச் சென்றீர்களே அம்மா!
அம்மாவின் குரல் கேட்காமல் இப்போது
துடியாய் துடிக்கின்றோம் அம்மா!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய தினமும்
இறைவனை மண்டியிட்டு வேண்டுகின்றோம் அம்மா!

"தாயிற் சிறந்ததொரு கோவில் இல்லை"

கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(cs. 42490) (2.6)

# டோங்கா தீவுக்கு இந்தியா ரூ.1.50 கோடி நிதியுதவி

புதுடில்லி, ஜன.27

சுனாமி தாக்கிய டோங்கா தீவுக்கு இந்தியாவால் உடனடி நிவாரணமாக ரூ.1.50 கோடி வழங்கப்படவுள்ளது. கடந்த 15ஆம் திகதி தெற்கு பசுபிக் தீவுகளில் ஒன்றான டோங்கா அருகே கடலுக்கு அடியில் எரிமலை வெடித்தது. அதனைத்தொடர்ந்து டோங்காவில் சுனாமிப் பேரலை தாக்கியது. இந்தப் பேரிடரில் அந்தத் தீவின் மொத்த மக்கள் தொகையில் 5இல் 4 பங்கு பேர் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், "டோங்காவில் நிவாரணம், மறுவாழ்வு மற்றும் மறுகட்டமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உடனடி நிவாரணமாக இந்தியா சார்பில் 1.50 கோடி ரூபா வழங்கப்படுகின்றது. இந்திய - பசுபிக் தீவுகள் ஒத்துழைப்பு கூட்ட மைப்பின் கீழ் நெருங்கிய நட்பு நாடு என்ற அடிப்படையில் இந்த உதவி டோங்காவுக்கு வழங்கப்படுகின்றது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

டில்லியில் நிராகரிக்கப்பட்ட

# அலங்கார ஊர்திகள் சென்னையில் அணிவகுப்பு

சென்னை, ஜன.27

டில்லி குடியரசு தின நிகழ்வில் நிராகரிக்கப்பட்ட அலங்கார ஊர்திகள் சென்னை குடியரசு தினவிழாவில் அணிவகுத்துச் சென்றன.

நாட்டின் 73ஆவது குடியரசு தினத்தையொட்டி சென்னை காமராஜர் சாலை காந்தி சிலை அருகே தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி மூவர்ண தேசியக் கொடியை ஏற்றி மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து டில்லி அணிவகுப்பில் நிராகரிக்கப்பட்ட அலங்கார ஊர்திகள் சென்னையில் அணிவகுத்துச் சென்றன. (ச-இ)



# மனித மூளையைக் கட்டுப்படுத்த 'சிப்'



மனித மூளையை 'சிப்' மூலம் கட்டுப்படுத்தும் புதிய முயற்சியில் உலக பணக்காரர்களில் ஒருவரும் டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் நிறுவுநருமான எலான் மாஸ்க் இறங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அண்மைக்காலமாக மனித மூளைகளோடு தொழில்நுட்பத்தை இணைக்க உலகளவில் பல்வேறு ஆராய்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் குறித்த பரிசோதனையை எலான் மாஸ்கின் நியூராலிங்க் நிறுவனம் விரைவில் தொடங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் மூலம் குறித்த சாதனங்களை தொடாமலேயே நினைவுகள் வாயிலாக இயக்க முடியும் எனவும், மனித மூளை என்ன நினைக்கின்றது என்பதையும் அந்தச் சாதனங்களில் பதிவு செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் இந்த 'சிப்'பின் மூலம் மனித மூளையில் ஏற்படும் முடக்குவாதம், நரம்பியல் பிரச்சினைகள், பாதிப்புகள் குறித்து சரி செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத வேகத்தில் சந்தோஷம் அளிக்கும் விஷயம் நடக்கும். எதிர்காலம் பற்றிய கவலை ஒன்று நீங்கும். மகிழ்ச்சி கூடும். அரசாங்க நன்மைக்காக முனைப்பாக முயற்சி செய்வீர்கள்.

**இடபம்:** எதிர்பாராத நன்மை ஒன்று வந்து குடும்பத்தை மகிழ்விக்கும். எதிர்பார்த்தவங்கிக்கடன்கிடைத்துபுதிய முயற்சியை தொடங்குவீர்கள். பிறருக்கு உதவி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

**மிதுனம்:** இன்று உங்களுக்கு சந்தோஷமும் கோபமும் ஒருசேர வரும். [illegible] ...ளர்களுக்கு கூடுதல் [illegible] ...வழி கிடைக்கும். புண்ணிய [illegible] ஈடுபடுவதால் மன அமை[illegible]

**கடகம்:** பல நாள் கழித்து மனதில் நிம்மதியும், அமைதியும் நிலவும். பழைய நண்பர்களைச் சந்தித்து பேசி மகிழ்ச்சி அடைவீர்கள். நீண்ட காலமாக கஷ்டப்படுத்திய சிரமம் இன்று நீங்கும்.

**சிம்மம்:** பழைய தவறுகளை மாற்றிக் கொள்ளும் செயல்களைச் செய்வீர்கள். முயற்சி வெற்றி தரும். ஆரோக்கியம் மேம்படும். கவலை தீரும். வாழ்க்கைத் துணைக்கு வெற்றியும் லாபமும் வரும்.

**கன்னி:** இது வரை மனதில் இருந்த பயத்தை நண்பர் நீக்குவார். வீண் [illegible] ...நிலை மாறும்.

**துலாம்:** பணியில் சிறு சாதனை செய்வதால் உங்களை நிறுவனம் பாராட்டும். மனதை வாட்டிய பயம் தீரும். பேச்சில் கவனம் தேவை. வலிய வரும் பிரச்சினைகளை வென்று நிம்மதி பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** சலிப்பு ஏற்படுத்திய விஷயத்துக்கு இன்று தீர்வு காண்பீர்கள். நீண்ட காலப் பகை ஒன்று முடிவுக்கு வருவதால் துயர் நீங்கும். உங்களின் சாதனை காரணமாக மதிப்பும், மரியாதையும் கூடும்.

**தனுசு:** மனதில் மகிழ்ச்சி நிலவும். புதிய நட்பு அறிமுகமாகும். பிறரிடம் [illegible]

**மகரம்:** ஆரோக்கியம் மேம்படும். உழைப்பு உங்களை உயர வைக்கும். குடும்பம் விரிவாகும். பகையான இருவரை இணைத்து வைப்பீர்கள். இன்று நல்லதே நடக்கும்.

**கும்பம்:** பிறரது குடும்ப விஷயங்களில் தலையிட வேண்டாம். மறதியால் கடமை தவறுவதற்கு வாய்ப்புள்ளது. பணியில் கவனம் தேவை. எந்தவொரு விஷயத்தையும் கவனத்துடன் கையாள வேண்டும்.

**மீனம்:** [illegible] ...ளர்களுக்கு உதவி செய்து [illegible] ...தேவையான பொருள் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர்களுக்கு சைக்கிள் வழங்கல்

வவுனியா.ஜன.27
வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளருமாகிய மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கத்தால், தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு, துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.
கட்சியின் அமைப்பாளர் ந.கருணாநிதி, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் உறுப்பினர் சந்திரசேகரம், வவுனியா வடக்குப் பிரதேச சபைக்கு புதிய உறுப்பினராக முன்மொழியப்பட்ட ரஞ்சினி ஜெயகரன் ஆகியோர் கலந்து கொண்டு துவிச்சக்கர வண்டிகளை வழங்கினர். (ஒ-4-110)

# இலங்கையை ஆக்கிரமிக்கும் சீனா இந்தியாவுக்கு அச்சுறுத்தலில்லை

## இந்தியப் புலனாய்வு அதிகாரி தெரிவிப்பு

**கொழும்பு, ஜன. 27**
**இலங்கையின் தமிழர் பகுதிக்கு சீனர்கள் வருகை தந்துள்ளமை, இந்தியாவுக்கு ஒரு போதும் அச்சுறுத்தலாக மாறாது என்று இந்திய இராணுவப் புலனாய்வுத் தலைமை அதிகாரியாகச் செயற்பட்ட கேணல் ஆர்.ஹரிகரன் தெரிவித்துள்ளார்.**

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவிக்கையில்; இரண்டாயிரம் கிலோமீற்றர் கடந்து இந்தியாவுக்கு அருகில் உள்ள யாழ்ப்பாணத்துக்கு சீனர்கள் வருகை தந்தமையால், இந்தியா குறித்து சீனர்களே பயப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தமிழர்களுக்கு சீனர்களைப் பிடிக்காது என்ற கருத்து தொடர்ச்சியாக நிலவி வருகின்றது.
பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் தமிழர்களுக்கு, சீனா கரம் கொடுத்தால், சீனர்கள் மீதான துவேசத்தைக் குறைக்கும் அணுகுமுறையாக அது காணப்படலாம்.
வரலாற்றில் ஒருபோதும் இல்லாத அளவு 2021 ஆண்டு இந்திய சீனா பொருளாதார, வர்த்தக வணிக உறவு அதிகரித்துள்ளது. இந்தியா பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதுடன், பெருமளவு ஆயுதங்களையும் வாங்கியுள்ளது. அரசியல், எல்லைப் பிரச்சினைகளை ஒதுக்கி விட்டு, வியாபார ரீதியிலாக நாம் பயன்பெறலாம் என்பதே சீனாவின் கொள்கை. ஜனநாயக நாட்டில் இதனைப் பார்க்க முடியாது. இதனையே இலங்கை விடயத்திலும் சீனர்கள் கையாளுகின்றனர் -என்றார். (ஒ-4-இ)

வேலணை நூலகத்தின் -

# வாசிப்புமாத போட்டிகள்; வெளியாகின முடிவுகள்!

யாழ்ப்பாணம், ஜன.27
வேலணைப் பொதுநூலகத்தால் பாடசாலை மாணவர்களிடையில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

**திருக்குறள் போட்டி - தரம் 1**
முதலாம் இடம் ஸ்ரீ.ஸ்ரீநிதி- யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, இரண்டாம் இடம் தி.கஜசங்கவி -தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, மூன்றாமிடம் ரூ.ஹம்சிகா வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம்.

**தரம்-2**
முதலாம் இடம் ர.கேதுஜன் வேலணை சைவப் பிரகாச வித்தியாலயம், இரண்டாமிடம் க.தனுஷகா - வேலணை சைவ பிரகாச வித்தியாலயம், மூன்றாமிடம் த.தரணிகா -வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம்.

**சொல்வதெழுதல் - தரம்-3**
முதலாம் இடம் தி.ஹம்மிக்கா - யாழ்.புனித ஜோன் பொஸ்கோ, இரண்டாமிடம் அ.ரஸ்மினி - வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம், மூன்றாமிடம் - ர.கர்ணிகா - வேலணை சைவப் பிரகாச வித்தியாலயம்.

**கணித செயற்பாடு - தரம்-4**
முதலாம் இடம் ஸ்ரீ.ஜதுசன் -வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், இரண்டாமிடம் - வ.தர்மிகன் - யாழ்.புனித தெரேசா மகளிர், மூன்றாமிடம் கி.மதுஷிகா யாழ்.புனித தெரேசா மகளிர் கல்லூரி.

**புலமைப்பரீட்சை மாதிரி வினாத்தாள் -தரம் 5**
முதலாம் இடம் கா.சச்சின் - வேலணை கிழக்கு மகா வித்தியாலயம், இரண்டாமிடம் ற.கபினா, வ.கன்சிகா-வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், ச.ஜெறோணியா -வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்.

**வாசிப்புப் போட்டி தரம்-6**
முதலாம் இடம் தி.கவிஷா, ஜ.யனுஷன் - வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம், மூன்றாமிடம் வி.டாரணியா - வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்.

**அகராதியில் இருந்து சொற்களை இனங்காணல் - தரம்-7**
முதலாம் இடம் த.ஷர்மிகா-வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம், இரண்டாம் இடம் சி.டனிசிகா - வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம், மூன்றாமிடம் ம.யதுசன் - வேலணை சரஸ்வதி வித்தியாலயம்.

**கட்டுரைப் போட்டி -தரம் - 8**
முதலாம் இடம் கு.சாருகா -யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் ம.வைஸ்ணவி -வேலணை மத்திய கல்லூரி, மூன்றாமிடம் ற.அபிஷா - வேலணை மேற்கு நடராஜா வித்தி.

**தரம்- 9**
முதலாம் இடம் அ.டிலக்ஷ- வேலணை மேற்கு நடராஜா வித்தி. -இரண்டாமிடம் ர.அபிநயா - வேலணை மேற்கு நடராஜா வித்தி., மூன்றாமிடம் ம.பிறைநில -வேலணை சரஸ்வதி வித்தியாலயம். (ச)

# அலம்பில் வயல் நிலங்களுக்குள் அத்துமீறும் மாடுகள்

## தடுத்து நிறுத்துமாறு மனு கையளிப்பு

முல்லைத்தீவு, ஜன.27
அலம்பிலில் பெரும்போகச் செய்கை மேற்கொண்டுள்ள வயல் நிலங்களுக்குள் கட்டாக்காலி மாடுகள் புகுந்து சேதம் ஏற்படுத்துவது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டச் செயலருக்கு மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.
அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.
பெரும்போகச் செய்கைக்காக இந்தமுறை அலம்பில் வயலில் சுமார் 190 ஏக்கர் நெல் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது பயிர்கள் கதிர்களாகியுள்ளன. ஆனால் கடந்த சில வாரங்களாக செம்மலைக் கிராம மக்களின் கட்டாக்காலி மாடுகள் வேலியை உடைத்து வயலுக்குள் பிரவேசித்து சேதம் விளைவித்து வருகின்றன.
மாடுகளைப் பிடித்து தண்டப்பணம் அறவிட்டு பண்ணையாளரிடம் ஒப்படைத்தும், அதே மாடுகள் மீண்டும் வயலுக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கின்றன. இது தொடர்பில் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-இ)

# சைக்கிளில் அலுவலகம் செல்லும் அரச ஊழியருக்கு பதவி உயர்வு!

## அமைச்சரவைப் பத்திரம் தயார்

கொழும்பு, ஜன.27
சைக்கிள் பாவனையை ஊக்குவிக்கும் வகையில் அமைச்சரவைப் பத்திரம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது என சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-
காற்று மாசைக் குறைக்கவும், நேர விரயத்தைத் தடுக்கவும் தொற்று அல்லாத நோய்களைக் கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக சைக்கிள்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.
சைக்கிளில் பணிக்கு வரும் ஊழியர்களுக்கு பதவி உயர்வு சலுகைகளை வழங்குவதற்கான ஒழுங்குமுறை வேலைத்திட்டம் ஒன்றையும் அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
போக்குவரத்து நெரிசல் ஏற்படும்போது ஒரு வாகனத்தால் கிலோமீற்றருக்கு 103.56 ரூபா அரசுக்கு இழப்பு ஏற்படுவது கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.
சைக்கிளைப் பயன்படுத்துவதன் மூலம் ஒரு கிலோமீற்றருக்கு 236 ரூபாவை மீதப்படுத்த முடியும். அரசாங்கத்துக்கு 339 ரூபா இலாபத்தை பெற்றுக்கொடுக்க முடியும்- என்றார். (எ-இ)

# இம்ரான் கானுடன் பந்துல சந்திப்பு

பாகிஸ்தானுக்கு உத்தியோக பூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள அமைச்சர் பந்துல குணவர்தன, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானைச் சந்தித்தார்.
பாகிஸ்தான் பிரதமர் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. சந்திப்பில் இலங்கை - பாகிஸ்தான் வர்த்தக உடன்படிக்கையை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மற்றும் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. (ஒ-4-இ)

# பாடசாலை நூலகத்துக்கு லொத்தர் சபை நிதியுதவி



யாழ்ப்பாணம், ஜன.27
கொடிகாமம் கரம்பைக் குறிஞ்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை நூலக அபிவிருத்திக்காக, தேசிய லொத்தர் சபையால் நிதியுதவி நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது. பாடசாலையின் அதிபர் கண்ணதாசனிடம், லொத்தர் சபையின் பணிப்பாளர் டி.ஜி.ஜெயசிறியால், ஒரு லட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது. பாடசாலைகளின் நூலக அபிவிருத்திக்காக இந்த நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது.
ஏற்கனவே யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன் [illegible] பாடசாலைகளுக்கு [illegible] (ஒ-4-20)

**துயர் பகிர்கின்றோம்**



இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் கடமையாற்றும் திரு. **இ.கேசவன்** அவர்களின் அன்புத் தந்தையார்.
**அமரர் கந்தையா இரத்தினம்**
அவர்கள் காலமானதையிட்டு அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
**இலங்கை திறந்த பல்கலைக்கழகம் யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய சமூகத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெற்றோரே குழந்தைகளின் முதல் ஆசிரியர்கள்

த.பாலகிட்ணபிள்ளை

குழந்தைகளின் நல்வாழ்வு மற்றும் நேர்மறையான வளர்ச்சிக்குப் பெற்றோரின் ஈடுபாடும் முக்கியமானது. கல்வி மற்றும் தொழில்முறை வெற்றிக்கு அவசியமான குழந்தைகளின் அடிப்படை உளவியல் தேவைகளை நிறைவு செய்யத் தவறியதன் மூலம் பெற்றோர் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தலாம். குழந்தைகள் பொதுவாக தங்கள் பெற்றோரை அவர்களின் உளவியல் தேவைகளுக்கு உறுதுணையாகக் கருதுவதாக ஆய்வுகள் உறுதிசெய்கிறது.

பெற்றோர் தங்கள் செயற்பாடு குழந்தைகளின் வளர்ச்சியில் நேர்மறை அல்லது எதிர்மறையை ஏற்படுத்தக்கூடும் என்பதை அங்கீகரிப்பது முக்கியம். எனவே தங்கள் குழந்தைகளின் நேர்மறையான வளர்ச்சியை வழிநடத்த விரும்பும் பெற்றோர் அவர்களின் உளவியல் தேவைகளை நிறைவுசெய்ய வேண்டும். இதன்மூலம் அதிக கல்வி மற்றும் தொழில்முறை வெற்றியை ஊக்குவிக்கிறார்கள்.

குழந்தைகளின் கருத்துகளையும் உணர்வுகளையும் ஒப்புக்கொள்வதன் மூலமும், அவர்களின் முடிவுகளை ஏற்றுக்கொள்வதன் மூலமும் பெற்றோர் தம் எதிர்பார்ப்புகளுக்குப் பின்னாலுள்ள காரணங்களை விளக்குவதன் மூலமும் வயதுக்கேற்ற பொறுப்புக்களை அவர்களிடம் ஒப்படைப்பதன் மூலமும் தங்கள் பிள்ளைகளின் சுயாட்சி உணர்வை ஆதரிக்கவேண்டும். அவர்கள் தங்கள் சொந்தத் தேவைகளையும் கருத்துகளையும் திணிப்பதன் மூலமோ என்ன நினைக்கவேண்டும் அல்லது உணர வேண்டும் என்று வற்புறுத்துவதனூடாகவோ உங்கள் எதிர்பார்ப்புக்குப் பின்னாலுள்ள காரணங்களைப் புரியவைக்க முற்படுவதோ அன்றி குழந்தைகளின் நடத்தை அல்லது தெரிவுகளைக் கட்டுப்படுத்த தண்டனைகளையும் வெகுமதிகளையும் பயன்படுத்துவதன் மூலமோ பிள்ளைகளைக் கட்டுப்படுத்தக்கூடாது.

பிள்ளைகள் தமது இளவயதில் தாம் பார்ப்பதையும் கேட்பதையும் மிக உன்னிப்பாக அவதானிக்கும் பழக்கம் கொண்டவர்கள். நாம் எமது வீட்டிலோ அல்லது பிள்ளைகளின் பார்வைக்குட்பட்ட இடத்திலோ போதைப்பொருள் பாவனையின்போது அவர்கள் மனதில் மாறாத காட்சியாக நிறைந்துவிடுகிறது. போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பாதக விளைவுகள் பற்றி முற்றிலுமாக விளக்க வேண்டிய அவசியமில்லாவிடினும் அவர்கள் இச்செயல் மூலம் 'தூண்டப்படும்' நிலைக்கு மாறுவதற்கான சந்தர்ப்பங்களைக் கூடிய அளவு தவிர்த்தல் வேண்டும். மேலும்

- எமது உடலையும் உள்ளத்தையும் எதனால் அல்லது எவரினால் பாதிப்பு ஏற்படுகிறது என்பதை தெரிந்து கொள்ளும் பக்குவம் இருத்தல் வேண்டும்.
- பிள்ளைகள் மத்தியில் நல்ல விடயங்களைத் தேர்ந்தெடுக்கும் திறமையை வளர்த்தல் வேண்டும். எமது அயலவர்கள் இவ்வாறு கெட்ட விடயங்களை பிள்ளைகள் மீது திணிக்க முற்படலாம்.
- தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் வரும் காட்சிகளும் கதாபாத்திரங்களும் நிஜ வாழ்க்கையில் பிழையான தோற்றத்தினைப் பிரதிபலித்துவிடுகின்றன.
- யாராவது முன்பின் அறியாதவர்கள் உண்பதற்கு அல்லது குடிப்பதற்கு ஏதாவது வழங்கினாலோ அல்லது தன்னுடன் கூடவரும்படி அழைத்தாலோ உடனே மறுத்துவிட்டு அவ்விடத்திலிருந்து விலகிவிடவேண்டும்

பெற்றோர் தங்கள் குழந்தை மீது அன்பு காட்டாமல் அலட்சியமாக செயல்படுவதனாலோ அன்றி அவர்கள் ஈடுபட்டுள்ள செயல்களில் பங்கேற்கத் தவறுவதாலோ அல்வது அவர்களுக்குத் தேவைப்படும்போது வழிகாட்டுதலோ ஆதரவோ இல்லாமல் சுயநலத்தோடு பிள்ளைகளின் எதிர்பார்ப்புக்களை நிராகரிப்பதைத் தவிர்க்க வேண்டும். முடிந்தவரை குழந்தைகளின் எதிர்பார்ப்புகளை தீர்த்துவைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எப்போதும் குழந்தைகளின் தொடர்பில் இருக்கவேண்டும். அதே நேரத்தில் அவர்களுக்கு நெருக்குதல் தரவும் கூடாது. அவர்களுக்கான நடைமுறைகளை மாற்றி எமது சொந்தக் கருத்துகளைத் திணிக்கக் கூடாது. முக்கியமாகப் பெற்றோர் குழந்தைகளின் குழப்பத்தைத் தீர்ப்பவர்களாக இருக்கவேண்டுமே தவிர அவர்கள் குழப்பத்தை உருவாக்குபவர்களாக இருத்தல் கூடாது.



## சிறிய பாலங்களின் விவரங்கள் திரட்டல்

யாழ்ப்பாணம்,ஜன.27

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளின் எல்லைகளுக்கு உட்பட்ட சிறிய பாலங்கள் புனரமைக்கப்படவுள்ளன. அதற்கான விவரங்களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு, மாகாண பிரதம செயலாளர் செயலகத்தால், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளிலும் தற்போது பாவனையில் உள்ள பழுதடைந்த கிராமியப் பாலங்கள் இருப்பின், அவற்றை இனங்கண்டு உரிய திருத்தத்தை மேற்கொள்வதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின்கீழ், இந்தத் திட்டத்தை முன்னெடுக்க அரசு கவனம் செலுத்தியுள்ளது. (ஒ-4.9)

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.27

வடக்கு மாகாண இலங்கை மின்சார சபை ஓய்வூதியர் நலன்புரி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் 29ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுன்னாகத்திலுள்ள இலங்கை மின்சார சபை மின்பாவனையாளர் சேவை நிலையத்தில் தலைவர் அ.நாகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் இலங்கை மின்சார சபையில் ஓய்வுபெற்ற புதிய உத்தியோகத்தர்களையும் பங்குபற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சடலங்களை எரியூட்ட ஆயிரம் ரூபா அறவீடு

### வலி.மேற்குப் பிரதேச சபை தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஜன.27

வலி.மேற்குப் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பொது மயானங்களில், சடலங்களைத் தகனம் செய்வதற்கு, ஆயிரம் ரூபா அறவீடு செய்ய ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சபையில் ஆராயப்பட்டது. ஆயிரம் ரூபாவுக்கு அதிகமாக பிரதேச மக்களிடம் கட்டணம் அறவிட முடியாது. பொதுமயானங்கள் அடிப்படை வசதிகள் இன்றிக் காணப்படுகின்றன. அவற்றை முதலில் அபிவிருத்தி செய்து, அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்த பின்னர், ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான கட்டணத்தை அறவீடு செய்யலாம் என்று உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

அதனையடுத்து தற்சமயம் ஆயிரம் ரூபாவை அறவீடு செய்யத் தீர்மானிக்கப்பட்டது. அதில் 200 ரூபாவை மயான அபிவிருத்திச் சபைக்கு வழங்குவதற்கும் சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. (ஒ-4,125)

## மின்சாரசபையின் தலைவர் பதவி விலகல்

கொழும்பு.ஜன.27

இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி. பேர்டினாண்டோ எதிர்வரும் முதலாம் திகதி முதல் பதவி விலகவுள்ளார்.

அவர் தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அனுப்பியுள்ளார்.

பல தடவைகள் மின்சார சபையின் தலைவராக பதவி வகித்த பேர்டினாண்டோ, யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு மாற்றுவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதையடுத்து, பெரும் சர்ச்சைக்குள்ளானார். இவரது செயற்பாடுகளுக்கு மின் பொறியியலாளர்கள் மற்றும் ஊழியர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### உயர் பட்டப்படிப்புகள் பீடம்
### புதிய அனுமதிகள்

01. தமிழில் முதுமாணி (Master of Tamil) 2022/23 (அணி VIII)
02. சைவசித்தாந்தத்தில் முதுமாணி (Master of Saiva Siddhanta) 2022/23 (அணி VII)
03. பண்பாட்டியலில் முதுமாணி (Master of Cultural Studies) 2022/23 (அணி IV)
04. சுற்றுச்சூழல் முகாமைத்துவத்தில் முதுமாணி (MSc in Environmental Management) 2022/23 (அணி III)
05. நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா (PGD in Library & Information Science) 2022/23 (Batch IV)

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிட மிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களை உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் வலைத்தளத்தில் (www.grad.jfn.ac.lk) பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி 28.02.2022

பதிவாளர்
25.01.2022

மேலதிக தொடர்புகளுக்கு : 021 222 3608

(cr.37433) (2.6)

## வழக்கறிஞர் நியமித்தல் - 2022
## சாவகச்சேரி பிரதேசசபை

சாவகச்சேரி பிரதேசசபையின் 31.12.2021 ஆம் திகதிய 26 ஆம் இலக்க தீர்மானத்திற்கு அமைவாக,

2022 மார்ச் மாதம் தொடக்கம் சாவகச்சேரி பிரதேசசபைக்கு தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்கு ஏதுவாகவும் சபை தொடர்பான வழக்குகளில் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக முன்னிலையாகவும் கூடியவாறு பொருத்தமான வழக்கறிஞரை நியமிக்கவுள்ளதால் தகுதியான விண்ணப்பிக்க விரும்புமுள்ள வழக்கறிஞர்கள் எதிர்வரும் 09.02.2022 புதன்கிழமைக்கு முன்பாக **தவிசாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்** எனும் முகவரிக்கு சுயவிபரங்கள் அடங்கிய கோவையினை நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும் பொருத்தமான வழக்கறிஞர் தெரிவின் இறுதித்தீர்மானம் சபைத்தீர்மானத்திற்கமைவாக மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**க.வாமதேவன்.**
**தவிசாளர்,**
**சாவகச்சேரி பிரதேசசபை,**
**கொடிகாமம்.**

(cr.37434) (2.6)



### இணுவில் திருவருள் மிகு
## ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய

புனராவர்த்தன அஷ்ட பந்தன நிகமொக்த நவகுண்டபக்ஷ மஹாயாக கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

## திருமுழுக்குத் திருமுகம் - 06.02.2022

பிலவ வருடம் தை மாதம் 14 ஆம் திகதி 27.01.2022 வியாழக்கிழமை காலை 9.36 மணிக்கு கும்பாபிஷேக கிரியாரம்பம்

27.01.2022 வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஸ்ரீ வித்யா கணபதி ஆராதனை, கணபதிஹோமம், பேரீதாடனம்

### எண்ணெய்க்காப்பு
**03.02.2022 வியாழன் நண்பகல் 12.00 மணி முதல்**
**04.02.2022 வெள்ளி இரவு 10.00 மணி வரை**

06.02.2022 காலை 8.00 மணிக்கு மேல் 8.45 இற்குள் வரும் கும்பலக்கினத்தில் ஸ்தூபிகள் கும்பாபிஷேகம் தொடர்ந்து பிரதான கும்பங்கள் வீதி பிரதட்சினம் 8.47 இற்கு மேல் 10.26 மணிக்குள் வரும் மீன லக்கின சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம்.

(CR 37435) (3/6)

**விநாயகர் அடியார்கள்.**

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



### இலங்கை - யாழ்ப்பாணம் - நீர்வேலி வடக்கு
## அருள்மிகு ஸ்ரீ சப்தகன்னிகள் திருக்கோவில்
## மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி சிறப்பிதழ் - 2022

பிலவ வருஷ தைத்திங்கள் 14ஆம் நாள் (27.01.2022) 9.28 மணி முதல் 10.06 மணி வரை இலங்கையின் வடபால் சைவமும் தமிழும் செழித்து விளங்குகின்ற யாழ்ப்பாண மாநகரத்தின் விவசாய புண்ணிய பூமியாம் நீர்வேலியம்பதியில் பல்லாண்டு காலமாக வீற்றிருந்து வேண்டுவோர்க்கு வேண்டுவனவற்றையெல்லாம் அருள் பாலித்து கொண்டிருக்கின்ற சப்தகன்னியர் திருக்கோவில் மஹாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா சுவஸ்தி ஸ்ரீ நிகழும் மங்கலகரமான பிலவ வருஷம் தைத்திங்கள் 14 ஆம் நாள் இன்று (27.01.2022) வியாழக்கிழமை அனுச நட்சத்திரமும் தசமி திதியும் சித்தியோகமும் கூடிய காலை 9.28 முதல் 10.06 மணி வரையுள்ள மீனலக்கின சுபவேளையில் கிராமிய தெய்வங்களாம் சப்தகன்னியர்களுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் குடமுழுக்கு பெருவிழா நடைபெற அன்னையர்கள் திருவுள்ளம் கொண்டுள்ளார்கள். அத்தருணமும் அதற்கு முன்னர் நடைபெறும் கிரிஜா பூர்வமான வழிபாடுகளில் அடியார்கள் ஆசாரசீலர்களாக வருகை தந்து திருத்தொண்டுகள் புரிந்து பக்தி சிரத்தையாக வழிபாடுகளில் பங்கேற்று அன்னையர்களின் திருவருளைப் பெற்றுய்வீர்களாக.

**சர்வ போதகாசிரியர்கள்**
பசுபதிபாசகர்
**சிவஸ்ரீ சதாமகாலிங்கசிவக்குருக்கள்**
குரு முதல்வர் நாயன்மாரகட்டு அரசடிப்பிள்ளையார் ஆலயம்
சிவானந்த கிருபா கிரிஜா பூபதி
**சிவஸ்ரீ சிவலோககிருபாகரக் குருக்கள்**
பிரதமகுரு திருநெல்வேலி முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.

**கும்பாபிஷேக பிரதம சிவாச்சாரியார்**
கிரிஜாஞான பானு, கிரிஜா போதக அனுபூதி, சக்தி கிரிஜாவியாசர், சிவாச்சாரிய இளவரசு, சாமஸ்ரீ தேசமான்ய
**இராஜஸ்ரீ சிவகமல்ராஜ் குருக்கள்**
முதன்மை பிரதம குருமுதல்வரும், பரம்பரை ஆதீனகர்த்தாவும்,
யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை
ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம், நல்லையம்பதி சிங்கார வேலவன் சிவகாயத்திரி அம்பாள் சுந்தர சுவர்க்கவாயில் சந்நிதானம்.

**சர்வ சாதகாசிரியர்கள்**
செஞ்சொற்சாதகன
**சிவஸ்ரீ மு.சசிதரக்குருக்கள்**
துணை முதல்வர் நாயன்மார்க்கட்டு குருமணிகள்
குருகுலம் சங்கீத சாதகன்
**சிவஸ்ரீ இ. கணேஸ்வரக்குருக்கள்**
பிரதம குரு குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் ஆலயம்

**மூர்த்திப சிவாச்சாரியார்கள்**
- சிவஸ்ரீ திரு. பால செல்வசேனக் குருக்கள் - இருபாலை
- சிவஸ்ரீ திரு. ஜெயசந்திரக் குருக்கள் - அச்சுவேலி
- சிவஸ்ரீ பால முத்துசாமி குருநாதக் குருக்கள் - கெருடாவில
- சிவஸ்ரீ சு. வித்தியாபரக் குருக்கள் - நெடியகாடு
- சிவஸ்ரீ இரா கிருசாந்தக் குருக்கள் - திருநெல்வேலி
- சிவஸ்ரீ ம.பாலசதாசிவக் குருக்கள் - நாயன்மார்க்கட்டு

**ஆசியுரைகள்**
சிவாச்சாரிய ஞானபானு
**சிவஸ்ரீ சிவலோக இராசேந்திரக்குருக்கள்**
பிரதம குரு திருநெல்வேலி முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பராமாச்சாரியசுவாமிகள்**
2ஆவது குருமாகா சந்நிதானம், நல்லை ஆதீனம்
**ஸ்ரீலஸ்ரீ ரிஷி தொண்டுநாத சுவாமிகள் (ஹவாய் ஆதீனம்)**
சுப்பிரமணிய கோட்டம், கோப்பாய் வடக்கு

**யாக சம்ரட்ஷகர்கள்**
- சிவத்திரு. சிவகிருபண் ஐயா - திருநெல்வேலி
- சிவத்திரு. ஜெ.பிரசாந் ஐயா - வட்டக்கச்சி
- சிவத்திரு ஓ. கிஷோதரன் ஐயா - அச்சுவேலி
- இராஜதிரு பிரவீன்ராஜ் ஐயா - வண்ணை
- இராஜதிரு கிஷோத்தமன் ஐயா - வண்ணை
- சிவத்திரு கிருசாந் ஐயா - தலவாக்கலை

**உபசாதகர்கள்**
- சிவஸ்ரீ க. சசிகரக்குருக்கள் - பொலிகண்டி
- சிவத்திரு இ. ரமணன் ஐயா - குரும்பசிட்டி
- சிவத்திரு இ. பிரசாந் ஐயா - திருநெல்வேலி
- சிவத்திரு ச. ரஜீவ்பாபு ஐயா - வண்ணை

**ஆலய அர்ச்சகர்கள்**
- சிவத்திரு செல்வரத்தினம் நிரோசன்
- சிவத்திரு செல்வரத்தினம் நிசாந்

பரம்பரை நித்திய பூசகர்களும் வாரிசுகளும்

**ஆலய தர்மகர்த்தா சபையினர்**
- நாகலிங்கம் செல்வரத்தினம்
- செல்வரத்தினம் நிரோசன்
- செல்வரத்தினம் நிசாந்
- செல்வரத்தினம் விநோஜ்

**சுவாமி அலங்காரம்**
செந்தூரன் குழுவினர்
புத்தூர்

**மங்கள வாத்தியம்**
சுதா குழுவினர்

பரந்துபட்ட ஆலமரத்தின் கீழமர்ந்து அருள்பாலிக்கும் சப்தகன்னிமார்கள் புதிய கருங்கல்லினாலான கருவறையிலிருந்து அருள்பாலிக்கவிருக்கும் ... பெறுவீர்களாக

பரம்பரை ஆதீனகர்த்தா
நாகலிங்கம் செல்வரத்தினம்

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்வு



எமது பிரதேச செயலகத்தின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றும் **திருமதி தி. விமலராஜினி** அவர்களின் அன்புத் தந்தையும் **திரு.கி.கமாலியில் தியாககுமார்** அவர்களின் அன்பு மாமனாருமாகிய

**அமரர் மருசலின் சிங்கராயர்**
**(சின்னையா)**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலாளரும், உத்தியோகத்தர்களும்**
**பிரதேச செயலக நலன்புரிச் சங்கம்**
**பிரதேச செயலகம், நெடுந்தீவு.**

(CS 1227)1-6

## யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி

கந்தரோடை, சுன்னாகம்

**26ஆவது ஆண்டு நினைவுப்பேருரை வைபவம் - 2022**



முன்னாள் அதிபர்
**அமரர் வி.சிவசுப்பிரமணியம்** அவர்களின்

காலம் : 28.01.2022 (வெள்ளிக்கிழமை)
நேரம் : முற்பகல் 9.30 மணி
இடம் : கல்லூரி வளாகம்

**தலைவர்**
திரு. மூ. செல்வஸ்தான் - அதிபர்

**நினைவுப்பேருரை**
பேராசிரியர். கு. மிகுந்தன் அவர்கள்
(விவசாய உயிரியல், சிரேஷ்ட பேராசிரியர், விவசாய பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

**விடயம்**
'நம்மவர் விவசாயம்
எதிர்பார்க்கும் மாற்றங்களும் எதிர்நோக்கும் சவால்களும்"

**நிறைவுரை**
வைத்திய கலாநிதி S. சிவானந்தராஜா அவர்கள்

கல்லூரிக்கீதம்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

விழா ஏற்பாட்டாளர்கள்

## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.

### சபையினது கழிவகற்றல் செயற்பாட்டிற்காக வாகனங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல்

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.

02. தேவையான தகைமைகள், மேலதிக தகவல்கள் பெறுகை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

03. ஆர்வமுள்ள வழங்குனர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன்மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 16.00 மணிவரை 27.01.2022 ஆம் திகதியிலிருந்து 11.02.2022ஆம் திகதி வரை யான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வை யிடலாம்.

04. ஆர்வமுள்ள வழங்குனர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர் எனும் முகவரியில் அமைந்துள்ள வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் 27.01.2022 தொடக்கம் 11.02.2022 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 14.00 மணி வரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா.1000/-(வற் தவிர்த்து) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

05. கேள்வி ஆவணங்களினை இருபிரதிகளில் தயாரித்து 11.02.2022ம் திகதி 15:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,புத்தூர் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக் கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.கிடைக்கப்பெற்ற கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறு கையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

06. இக்கேள்வி கோரலில் உள்ளநிபந்தனைகளில் அவசியமேற்படுமிடத்து மாற்றத்தை ஏற்படுத்தல், சேர்த்தல் அல்லது இல்லாது செய்தல் என்பவற்றின் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.

| இல | வேலை விபரம் | ஒப்பந்த இல | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் கேள்விப்பணை | |
|---|---|---|---|---|---|
| | | | | மீளளிக்க முடியாத கேள்வித் தொகை | செல்லுபடியாகும் காலம் |
| 1 | சபையினது கழிவகற்றல் சேவை தேவைகளிற்காக இழுவைப் பெட்டியுடன் உழவு இயந்திரத்தை சாரதியுடன் வாடகைக்கு அமர்த்துதல். | NP/14/41(15) /Tractor Service/ 2022 | 01வருடம் | 10,000.00 | 25.04.2022 |
| 2 | பக்கோ லோடர் (Backhoe loader Mechine) மற்றும் புல் டோசர் (Pull Dozer) என்பவற்றை மணித்தியால அடிப்படையில் சேவைக்கு அமர்த்துதல் | NP/14/41(15) /Backco/ 2022 | 01வருடம் | 10,000.00 | 25.04.2022 |

**தியாகராஜா நிரோகஷ்**
**தவிசாளர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு**
**வலிகாமம் கிழக்கு, பிரதேசசபை, புத்தூ.**
**27.01.2022**

(cr.37432) (2.3)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
05 . 01 . 1947



மறைவு
27 . 01 . 2020

**அமரர் முத்துலிங்கம் பிரேமாவதி**

ஆண்டுகள் இரண்டு
நகர்ந்து மறைந்தாலும்
நீங்காது எம் மனதில்
என்றும் நிலையாக
வாழ்வீர் அம்மா!

**உங்கள் ஆத்ம சாந்திக்காக**
**என்றும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.**

**குடும்பத்தினர்**

(cs.42484) (2.6)

## மரண அறிவித்தல்

பிறப்பு
11 . 09 . 1936



உதிர்வு
24 . 01 . 2022

### கதிரித்தம்பி காசிநாதர்

**(வாழைச்சேனை தேசிய கடதாசி ஆலை கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பொது முகாமையாளர்)**

யாழ். நீர்வேலி வடக்கு காமாட்சி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட கதிரித்தம்பி காசிநாதர் அவர்கள் 24-01-2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கதிரித்தம்பி, செல்வரட்ணம் தம்பதிகளின் ஏக புதல்வரும், காலஞ்சென்ற குமாரசுவாமி, தங்கம்மா தம்பதிகளின் அருமை மருமகனும், கமலாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும், றமணி, ஸ்ரீகாந்தன் (ஆசிரியர்- கந்தளாய் பேராறு பரமேஸ்வரா மகா வித்தியாலயம்), ஜெயகாந்தன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருள்மொழி (ஆசிரியை- புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), விஜிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், லோகசறோஜா (கனடா) அவர்களின் அன்பு அண்ணாவும், செல்லத்துரை (கனடா), காலஞ்சென்ற கனகசுந்தரம், மகேஸ்வரி, குணவதி (ஜேர்மனி), மதிவதனா, இரவிச்சந்திரன் (பிரணவன் இரும்பகம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிருஷ்ண தாஷன், சிவராஜா (ஜேர்மனி), மோகனதாஷ், புவனேஸ்வரி, சுபேந்திரா ஆகியோரின் அன்புச் சகலனும், லஷ்மிதா, லஷ்மிநாத் (சுவிஸ்), பிரவிநாத் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (27-01-2022) வியாழக்கிழமை பிற்பகல் 02:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் சீயாக்காடு மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
இரவிச்சந்திரன் - மச்சான் : +94777161929
ஸ்ரீகாந்தன் - மகன் : +94770878734
ஜெயகாந்தன் - மகன் : +41793392396

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(CS 42483) (3 / 6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 07 . 1946



இறப்பு 26 . 01 . 2022

## திருமதி செல்லம்மா குலசேகரம் (துரை)

சங்கானையை பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா குலசேகரம் அவர்கள் நேற்று (26.01.2022) புதன்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி திருநாவுக்கரசு சின்னம்மா தம்பதியரின் மூத்த மகளும், திரு.திருமதி இராசையா இராசம்மா தம்பதியரின் மருமகளும், குலசேகரத்தின் (துரை) அன்பு மனைவியும், சிவபாலன் (கிருபா மோட்டோஸ்-சங்கானை) சிவதீபன் (சுவிஸ்) சிவகௌரி (பிரதேச செயலகம் உடுவில்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவரூபி (ஆசிரியை சண்டிலிப்பாய் வடக்கு த.க.பாடசாலை), இராஜ பவானி (சுவிஸ்), திருக்குமார் ( பிரதேச செயலகம், காரைநகர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மகதியின் அன்புப் பேர்த்தியும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற சிவபாதம், தங்கேஸ்வரி, பத்மநாதன் (அப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.இல:021 225 5311

# எரிபொருள் நெருக்கடி; ரயில்சேவை பாதிக்கும்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ரயில்வே திணைக்களத்துக்கு நாளாந்தம் தேவையான எரிபொருளை வழங்காவிடின், ரயில் சேவைகள் பாதிக்கப்படலாம் என்ற ரயில்வே தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.ரயில் திணைக்களத்திடம் சுமார் 5 லட்சம் முதல் 6 லட்சம் லீற்றர் வரையான, எரிபொருள் இருப்பு உள்ள போதிலும், அது தற்போது மூன்றரை லட்சம் லீற்றராகக் குறைந்துள்ளது.ரயில்கள் முறையாக இயங்கினால், நாளொன்றுக்கு 1 லட்சம் லீற்றர் எரிபொருள் செலவு ஏற்படும்.

எனவே இருப்புக் குறைந்தால் சேவைகள் பாதிக்கக் கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ஒ-4-இ)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில்
அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 45 ரூபா
077 334 1281

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

அங்கர் பாதுகாப்பு சேவையின் ஊடாக வவுனியா மாவட்டத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக கடமை புரிய விரும்புபவர்கள் பின்வரும் நாட்களில் நேர்முக தேர்விலே கலந்து கொண்டு வேலையினை பெற்று கொள்ளமுடியும்.

வயதெல்லை : 22 – 60

**சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

- ❖ தேசிய அடையாள அட்டை பிரதி
- ❖ பிறப்பு சான்றிதழ் பிரதி
- ❖ கிராம சேவகரின் வதிவிட சான்றிதழ்
- ❖ கல்வி தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்

**தகைமைகள்**

- ❖ உயரம் : 5.4 inch
- ❖ மார்பு சுற்றளவு : 32.inch

**நேர்முக தேர்வு இடம் பெறும் இடம்**

- ❖ இடம் : இல. 255B புகையிரத நிலைய வீதி, கரப்பன்காடு, வவுனியா.
- ❖ காலம் : 28ஆம் 29 ஆம் திகதி மற்றும் 31ஆம் திகதி, தை மாதம் 2022
- ❖ நேரம் : காலை 09.00 – மாலை 4.00 மணி வரை

தொடர்புகளுக்கு : 077 320 6484 / 077 239 2850
மேலதிக தொடர்புகளுக்கு வவுனியா அலுவலகம் : 076 818 1200 / 024 222 8169

அங்கர் பாதுகாப்பு சேவை, வவுனியா.

(CS 00958) (3/6)

## வீட்டு வேலைக்கு பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் வீட்டில் தங்கி
நின்று வேலை செய்வதற்கு
பணிப்பெண் தேவை.
2 கொரோனா தடுப்பூசிகளும்
பெற்றுக்கொண்டவராக இருத்தல்
வேண்டும்.
தொடர்பு: (76) 004 6231

(cs.42482) (2.6)

## பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரப்பகுதியில்
இயங்கிவரும்
**கைத்தொலைபேசி**
**விற்பனை நிலையத்தில்**
பணிபுரிவதற்கு ஆள் தேவை.
**ஆண், பெண்** இருபாலாரும்.
(தென்மராட்சிப் பகுதிக்கு உட்பட்டவர்கள்
தொடர்புகொள்ளவும்)
**075 166 3553**

(cs.42487) (2.6)

# மரண அறிவித்தல்

மண்ணில் 25 . 12 . 1951



விண்ணில் 26 . 01 . 2022

## கந்தையா இரத்தினம் (தாண்டி)

மதவடி வீதி, மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இரத்தினம் (தாண்டி) அவர்கள் நேற்று (26.01.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கமுத்து தம்பதியரின இளைய புதல்வனும், காலஞ்சென்றவர்களான பெரியதம்பி தங்கம்மா தம்பதியரின் இளைய மருமகனும், காலஞ்சென்றவர்களான தெய்வநாயகி, கந்தப்பிள்ளை மற்றும் கதிர்காமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசமலரின் ஆருயிர் கணவனும், சர்மிளா (ஆசிரியர், ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை) கேசவன் (ஊழியர், இலங்கை திறந்த பல்கலைக்கழக பிராந்திய அலுவலகம், யாழ்ப்பாணம்) கல்யாணி (ஆசிரியர், புசல்லாவை இந்துக் கல்லூரி, கண்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமுரளிதாஸ், நிரூஜா, கொலின்ஸ்ரன் ஆகியோரின் மாமனாரும், நிலக்ஷன், அட்சயன், கியாறா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2022) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று, முற்பகல் 11.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் மாவிட்டபுரம் தச்சன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
கேசவன் : 076 669 5661
செல்வா : 077 192 3237

## கேள்வி அறிவித்தல்

**யாழ் ஒளி மின்நிலையம், இலங்கை மின்சார சபை, சுன்னாகம்.**
**சேவைகளுக்கான கேள்வி கோரல்**

இலங்கை மின்சாரசபை யாழ் ஒளி மின் உற்பத்தி நிலையத்தில் பணிபுரியும் பொறியியலாளர் போக்குவரத்துக்காக மகிழ் ஊர்ந்து (Motor Car) ஒன்று ஒரு வருட (One year) வாடகை அடிப்படையில் தேவைப்படுகின்றது. இது சம்பந்தமான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப்பத்திரங்களை அலுவலக நேரத்தில் 10.02.2022 பி.ப 2.00 மணி வரை பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதான பொறியியலாளர்,
யாழ் ஒளி மின்நிலையம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.
தொ.பே.இல. 021 224 2247/8

Office of the Deputy General Manager,
Ceylon Electricity Board,
Generation Head Quarters
New Kelani Bridge Road,
Kolonnawa.
Telephone No.0112 423 897

கேள்விப்பத்திர பெறுமதி. - ரூபா. 1.000.00
கேள்விப்பத்திர பிணை வைப்பு. - ரூபா. 18.000.00
பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களை
Office of the Deputy General Manager,
Ceylon Electricity Board,
Generation Head Quarters,
New Kelani Bridge Road,Kolonnawa.)
Telephone No.0112 423 897 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 10.02.2022 பி.ப 2.00 மணிக்கு Office of the Deputy General Manager, Ceylon Electricity Board, Generation Head Quarters, New Kelani Bridge Road, Kolonnawa. என்னும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் திறக்கப்படும்.

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 . 03 . 1937



மறைவு 19 . 01 . 2020

## அமரர் திருமதி ஐஸ்வரியம் செல்லத்துரை

திதி – தசமி

இரண்டாண்டு ஆனால் என்ன ? இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் நீங்காத நினைவலைகளையும், காலத்தில் கலையாத பாசத்தையும் கொடுத்து எமது குடும்பத்தின் "ஐஸ்வர்யமாகவே" வாழ்ந்து மறைந்த உங்களது ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அத்துடன் இரண்டாம் ஆண்டு திவச நிகழ்வுகள் இன்று (27.01.2022) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாகம்மாள் கோவில் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம். (cs.42470 (2.6)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதி கோரியோர்....

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைகளும் "நீதிக்கான அணுகல்" நடமாடும் சேவையில் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

பல்வேறு விசாரணைகளுக்கு சமுகமளித்து சலிப்படைந்துள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், நடமாடும் சேவையில் முன்னெடுக்கப்பட வுள்ள விசாரணைகளில் நம்பிக்கை இல்லை என்று தெரிவித்திருந்தனர்.

நேற்று மாவட்டச் செயலகத்தில் நடமாடும் சேவை நடைபெற்ற நிலையில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மாவட்டச் செயலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். ஆர்ப்பாட்டத்தின் பின்னர் மாவட்டச் செயலக வளாகத்துக்குள் அவர்கள் நுழைய முயன்றபோது, பொலிஸார் அவர்களுக்கு உள்நுழையத் தடை விதித்தனர். அதையடுத்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டன.

"எங்கள் உறவுகள் காணாமற்போகவில்லை. காணாமல் ஆக்கப்பட்டார்கள். எமக்கு இழப்பீடும், மரணச் சான்றிதழும் தேவையில்லை. இதனை நடமாடும் சேவைக்காக வந்த அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும்" என்று காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர். அதை ஏற்றுக்கொள்ளாது அங்கு கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மீது பலப்பிரயோகம் மேற்கொண்டதால் பதற்றமான நிலைமை காணப்பட்டது.

பல மணி நேரத்தின் பின்னர் அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கும், நடமாடும் சேவைக்காக வந்திருந்த அதிகாரிகளுக்கும் இடையே காரசாரமான கருத்துப் பரிமாறல்கள் நடைபெற்றன.

"இந்த அரசே எமது உறவுகளைக் காணாமல் ஆக்கியது. அவர்களிடம் இருந்து எமக்கான நீதி எவ்வாறு கிடைக்கும்? இதுவரை அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் விசாரணைக்கு என்ன நடந்தது? மரணச்சான்றிதழையும், இழப்பீட்டையும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் வேண்டாம் என்கின்றோம். அதை ஏன் எம்மீது திணிக்கிறீர்கள்?. இனிமேல் இங்கு வரவேண்டாம்" என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அதிகாரிகளிடம் தெரிவித்தனர். (எ-110)

## மு.ப. 11 மணி....

அதற்குப் பொலிஸார் தடை விதித்ததால் களேபரம் ஏற்பட்டது.

முற்பகல் 11 மணியளவில் எம்முடன் பேச்சில் ஈடுபட்ட வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, 'உள்ளே சமாதான நீதிவான்களே வந்துள்ளனர், இன்னமும் அதிகாரிகள் வரவில்லை. அவர்கள் வந்ததும் உங்களை உள்ளே அனுமதிக்கின்றோம்' என்று தெரிவித்தாரென காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் குறிப்பிட்டனர்.

காலை 9 மணிமுதல் நடமாடும் சேவை என்று அறிவித்து 11 மணிவரை அதிகாரிகள் வரவில்லை. இப்படித்தான் இவர்களின் அனைத்துச் செயற்பாடுகளும், கண்துடைப்புக்காகச் செய்யப்படுபவை என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கொதிப்புடன் தெரிவித்தனர். (எ-110)

## கிளிநொச்சி....

நேற்றுமுன்தினம் 40 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர். தங்களைப் பரிசோதனைக்கு உட்படுத்திக் கொண்டவர்களிலேயே தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

சமூகத்தில் அதிகளவான கொரோனாத் தொற்றாளர்கள் காணப்படலாம். ஒமிக்ரோன் திரிபுத் தொற்று வேகமாகப் பரவி வருவதால் மக்கள் விழிப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும்.

மாவட்டத்தில் மக்கள் கொரோனாத் தடுப்பு சுகாதார நடைமுறைகளை பின்பற்றாது நடந்து கொள்வதை அவதானிக்க முடிகின்றது. பொதுமக்கள் கண்டிப்பாகச் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும் என்று சுகாதாரத் தரப்பினர் கோரியுள்ளனர். (எ-இ)

## முடக்கத்தை...

மக்கள் பின்பற்ற வேண்டும்.

இவ்வாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா சிகிச்சை நிலையங்களில் 6 ஆயிரத்து 25 கட்டில்கள் தற்போது பயன்படுத்தப்படுகின்றன. எதிர்காலத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் அதனை சமாளிக்கக்கூடிய வளம் உள்ளது. பழைய நடைமுறை பின்பற்றப்படும். அத்துடன், மருத்துவமனைகளில் போதுமானளவு 'ஒட்சிசன்' உள்ளது. மருத்துவமனைகளில் இடப்பற்றாக்குறை மற்றும் ஒட்சிசன் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என வெளியாகும் தகவல்கள் போலியானவை.

நாட்டை மீண்டும் முடக்குவதை நினைத்தும் பார்க்க முடியாது. அவ்வாறானதொரு நிலைமை ஏற்படாமல் இருக்க பொது மக்கள் சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும். வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த பொறுப்புடன் செயற்பட வேண்டும். ஏற்கனவே நாடு முடக்கப்பட்டதால் ஏற்பட்ட பொருளாதாரத் தாக்கங்கள் இன்னும் எதிரொலித்துக் கொண்டுதான் இருக்கின்றன-என்றார். (எ-44)

## முடக்கத்தை நாடு...

அதனால் கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்கு கடுமையான நடவடிக்கைகள் அவசியம்.

இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரான மருத்துவர் பிரசாத் கொலம்பகே வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே இந்த விடயத்தை வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் பாரதூரமான நிலைமை ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வைரஸின் பாரதூரத்தன்மையை மக்கள் மறந்து விட்டனர். அது தொடர்பில் அவர்களை தெளிவுபடுத்த வேண்டும்.

இந்தியா போன்ற நாடுகளில் வைரஸ் பரவல் மீண்டும் தலைதூக்கியுள்ளது. அங்குள்ள மாநிலங்கள் முடக்கப்பட்டு வருகின்றன. எமது நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. மக்களும் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தநிலையில் நாட்டை முடக்கினால் ஏற்படும் பாதிப்புக்களை இலகுவில் கணித்துவிடமுடியாது.

அதேவேளை, கொரோனாத் தொற்றுப் பரவலைத் தடுக்கத் தவறினால் எதிர்காலத்தில் கொரோனா மரண வீதமும் அதிகரிக்கும்-என்றார். (எ-44)

## நானே....

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஊடாகப் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவான முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க 43ஆம் படையணி எனும் அரசியல் இயக்கத்தை உருவாக்கி, அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்துச் செயற்படுகின்றார் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. இது தொடர்பில் சஜித் பிரேமதாஸவிடம் ஊடகங்கள் நேற்று வினவியபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சம்பிக்க ரணவக்கவின் உண்மையான திட்டம் என்னவென்று எனக்குத் தெரியாது. ஆனால், நான்தான் எதிரணியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர்.

கடந்த தடவை ஜனாதிபதித் தேர்தலின் போது எதிரணிகளுக்குள் ஒற்றுமை இல்லாத காரணத்தால் எனக்கான வாக்குகள் சிதறின. இதனால் கோத்தாபய ராஜபக்ச வெற்றிவாகை சூடினார்.

அடுத்த தடவை கோத்தாபய ராஜபக்சவோ அல்லது வேறெந்த ராஜபக்சவோ ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கினால் வீழ்த்தியே தீருவேன்.

நாட்டு மக்கள் இன்று ஐக்கிய மக்கள் சக்தியின் பக்கமே உள்ளனர். அவர்கள் நாட்டுக்கான புதிய தலைவரைத் தேடுகின்றனர். அவர்களின் விருப்பத்துக்கிணங்க நான் அடுத்த தடவையும் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவேன். மக்களின் அமோக ஆதரவுடன் வெற்றியடைவேன் என்ற நம்பிக்கை எனக்கு நூறு வீதம் உண்டு-என்றார். (எ-22)

## சிக்கலில்...

நேற்று முற்பகல் நிறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, மின்சாரக் கட்டமைப்பிலுள்ள ஏதேனும் ஒரு மின்னுற்பத்தி நிலையத்தின் விநியோகம் தடைப்பட்டால் மீண்டும் மின்வெட்டை நடைமுறைப் படுத்த வேண்டியநிலை உருவாகும் என மின்சார பொறியியலாளர்கள் சங்கம் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தது.

எரிவாயு கசிவு காரணமாக களனிதிஸ்ஸ சொஜிட்ஸ் தனியார் மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்திச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்றும், அதன் திருத்தப் பணிகள் பூர்த்தியாக சுமார் ஐந்து நாள்கள் செல்லும் எனவும் மின்சாரப் பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். அதனால் தேசிய மின் கட்டமைப்பு 163 மெகாவாட்ஸ் மின்சாரத்தை இழக்க நேரிட்டுள்ளது.

எரிவாயுக் கசிவு ஏற்பட்டுள்ளதால் ஜனவரி மாதம் 22 ஆம் திகதி சுமார் 12 மணித்தியாலங்கள் மின் உற்பத்தி நிலையத்தை செயலிழக்கச் செய்து, திருத்தப் பணிகளை மேற்கொள்ள அனுமதியளிக்க வேண்டும் என்று கட்டமைப்பு கட்டுப்பாட்டுப் பிரிவிடம் கடந்த 19 ஆம் திகதி கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது என்றும், எனினும், கட்டமைப்பு கட்டுப்பாட்டுப் பிரிவினர் அதற்கு பதிலளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, சபுகஸ்கந்தை மின் உற்பத்தி நிலையத்தில் செயலிழந்த மின் பிறப்பாக்கி இன்னமும் இயங்க ஆரம்பிக்கவில்லை. இந்த மின் உற்பத்தி நிலையத்துக்கு தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்வதில் எழுந்துள்ள நெருக்கடியே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. இந்த மின்னுற்பத்தி நிலையத்தை தேசியக் கட்டமைப்புடன் இணைப்பதற்கு நேற்றிரவு முதல் மின்சார சபை முயற்சிகளை எடுத்து வருகின்றது என்று தெரியவருகின்றது. இந்த நெருக்கடி நிலைமைகளால் தடையற்ற மின்சார வழங்கல் நடைபெறுவது கேள்விக்குறியாகியுள்ளது. (எ-இ)

## வடக்கு....

அவரால் தமிழ் மொழியை செவிமடுத்து விளங்கிக் கொள்ளவே முடியும். வாசித்தறிவது கடினம் என்பதால் தனக்கு வரும் கடிதங்கள் மற்றும் அறிக்கைகளை ஆங்கிலத்தில் தரவேண்டும் என்றும் அவர் பணித்துள்ளார். அத்துடன் வடக்கு மாகாண பிரதம செயலாளர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர். அவராலும் தமிழ் மொழி மூலமான முறைப்பாடுகளையோ கோரிக்கைகளையோ வாசிக்க முடியாது.

இந்த நிலையில் வடக்கு மாகாண சபை நிர்வாகத்தில் உள்ள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் தமது முறைப்பாடுகள், கோரிக்கைகளை உரிய இடத்துக்கு கொண்டுசென்று தீர்வைப் பெறுவதில் பெரும் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர்.

குறிப்பாக பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு வரும் மேன்முறையீடுகள் தமிழ் மொழி மூலம் எழுதப்பட்டே அனுப்பப்படுகிறன. ஆனால் அவற்றை ஆளுநருக்கு ஆங்கிலத்தில்தான் மொழிபெயர்த்து அனுப்பவேண்டிய நிலை தோன்றியுள்ளது. தமிழில் மூன்று பக்கங்களில் எழுதி அனுப்பப்படும் முறைப்பாடுகள் ஆங்கிலத்தில் மிகச் சுருக்கமாகவே மொழிபெயர்ப்பு செய்து வழங்கப்படுகின்றன. இதனால் முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்ட பிரச்சினைகளை முழுமையாக ஆளுநரோ, பிரதம செயலாளரோ அறியமுடியாத நிலை தோன்றியுள்ளது. அத்துடன் குறித்த பிரச்சினைக்கான தீர்வும் உரிய நேரத்தில் பெறமுடியாமல் தாமதமாகிறது என பாதிக்கப்பட்ட தரப்புக்கள் விசனம் தெரிவிக்கின்றன.

அத்தோடு, தமிழில் வரும் கடிதங்கள், முறைப்பாடுகள் உள்ளிட்ட ஆவணங்களை மொழிபெயர்ப்புச் செய்வதற்கான ஆளணி பற்றாக்குறை, நேரம் இன்மை போன்ற காரணங்களால் பல அரச நிர்வாகச் செயற்பாடுகள் தேக்கமடைந்துள்ளன என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது தொடர்பாக உரிய தரப்பினர் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கு போக்குவரத்துச் சபையில்

# பணிநீக்கப்பட்ட அதிகாரி மீண்டும் சேவையில் இணைப்பு

## அரசியல் அழுத்தம் காரணமா?

**யாழ்ப்பாணம், ஜன. 27**

**வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் முக்கிய அதிகார நிலையில் பணியாற்றும் அதிகாரியொருவர் தவறான தகவல்களை வழங்கி பெருந்தொகைப் பண மோசடியில் ஈடுபட்டு, பணிநீக்கம் செய்யப்பட்ட நிலையில், அரசியல் அழுத்தம் காரணமாக அவரின் பணிநீக்கம் திரும்பப் பெறப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
சம்பந்தப்பட்ட அதிகாரி 2019ஆம் ஆண்டு குறித்த விடுமுறையை எடுத்துள்ளார். அரச சார்பு தமிழ்க் கட்சியொன்றின் செயற்பாடுகளுக்காக அவர் அந்த விடுமுறையை எடுத்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
அதன் பின்னர் மேற்படி நபர் கொடுப்பனவு அற்றதாக தான் எடுத்துக்கொண்ட விடுமுறையை கொடுப்பனவுடனான விடுமுறை யாக மாற்றியுள்ளார்.
இது தொடர்பில் மேலிடத்துக்குத் தெரிவிக்கப்பட்டு அங்கு அவருக்கு எதிராக விசாரணைகள் இடம்பெற்று வந்துள்ளன.
கடந்த 19ஆம் திகதி அவர் தற்காலிகப் பணிநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். பின்னர், அரசியல் செல்வாக்குக் காரணமாக கடந்த 21ஆம் திகதி அவரின் பணிநிறுத்தம் அவ சர அவசரமாக திரும்பப் பெறப்பட்டுள்ளது.
இது தொடர்பில் இலங்கை போக்குவரத்துச் சபையின் வடமாகாண பிரதம பிராந்திய முகாமையாளர் செ.குணபாலச்செல்வத்தை தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:
நான் கடமைகளைப் பொறுப்பேற்க முன்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதுதொடர்பில் எனக்கு முழுமையான தகவல்கள் தெரியாது - என்றார்.
தற்காலிகப் பணிநிறுத்தமும், பின்னர் அது திரும்பப் பெறப்பட்டமையும் தாங்கள் பொறுப்பில் இருக்கும்போதுதானே நடைபெற்றது என்று அவரிடம் கேட்கப்பட்டது, இதற்குப் பதில் வழங்கிய முகாமையாளர், இது தொடர்பான விசாரணையும் சரி, அதன் அடிப்படையிலான நடவடிக்கைகளும் சரி மேலி டத்தால்தான் நடத்தப்படுகின்றன. எனவே இது தொடர்பில் எனக்கு முழுமையான தகவல்கள் தெரியாது - என்றார். சிறுசிறுகுற்றங்களை புரியும் சாரதிகள், நடத்துநர்கள் உடனடியாக தண்டனைக்கு உட்ப டுத்தப்படுகின்ற, பணிநீக்கம் செய் யப்படுகின்ற நிலையில் உயர்நிலை அதிகாரிகள் புரிகின்ற பாரதூரமான குற்றங்கள் இருட்டடிப்பு செய்யப்படு கின்றமையானது வடமாகாணப் போக்குவரத்துச் சபைக்குள் சட்டம் பாரபட்சமற்ற முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்ப தையே காட்டுகின்றது என்று வடமாகாண போக்குவரத்துத் துறையின் ஊழியர்கள் அதிருப்தி தெரிவித்துள் ளனர். (ம-159)

### தாய்வான் எல்லைக்குள்

# சீனாவின் போர் விமானம் அமெரிக்கப் போர்க்கப்பல்



பீஜிங், ஜன. 27
தாய்வானை சொந்தம் கொண்டாடிவரும் சீனா, அந்த நாட்டை அச்சுறுத்தும் வகையில் போர் விமானங்களை அனுப்பியுள்ளது. இதற்குப் போட்டியாக அமெ ரிக்கா இரண்டு போர்க் கப்பல்களை அங்கு அனுப்பியுள்ளது.
தாய்வானை சொந்தம் கொண்டாடிவரும் சீனா, தென்சீனக் கடற்பகுதியை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்து வருகிறது. இதற்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. இந்த விவகாரத்தில் தாய்வானுக்கு அமெரிக்கா ஆதரவாக இருக்கிறது.
இந்த நிலையில் இரண்டு அமெ ரிக்க விமானம் தாங்கிக் கப்பல்கள் சர்ச்சைக்குரிய தென் சீன கடற்பகுதிக்குள் நுழைந்துள் ளன.
பயிற்சியில் ஈடுபடுவதற்காக யு.எஸ். எஸ்.கார்ல் வின்சன், யு.எஸ்.எஸ். ஆபிரகாம் லிங்கன் ஆகிய இரு அமெரிக்க கப்பல்கள் தென் சீனக் கடலுக்குள் நுழைந்துள்ளதாக பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.
சீனாவும் தன் போர் விமானங்களை தாய்வான் எல்லைக்குள் அனுப்பியுள்ளது. இதனால் அந்தப்பகுதி பரபரப்புக்கு உரியதாக மாறியுள்ளது. (ம)

# பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.27
யாழ்ப்பாண மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் 2022ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் சங்கத் தலைவர் க.ஜினதாஸ் தலைமையில் சங்க மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
கூட்டத்துக்கு ஒவ்வொரு கழகத்திலிருந்தும் 2 பிரதிநிதிகளை மட்டும் அனுப்புமாறும், சங்கத்துக்கு செலுத்த வேண்டிய வருமதிகளைச் செலுத்தி கூட்டத்தில் பங்கு பற்றுவதற்கு வேண்டிய ஒத்துழைப்பை வழங்குமாறும் சங்கத்தின் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.(வ-இ)

# மின்தகன மயானத்துக்கு அபிவிருத்திக் குழு தெரிவு

**சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் மின்தகன மயானம் அமைப்பதற்கு அபிவிருத்திக் குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது. மின்தகன மயானம் தொடர்பில் நகரசபையினர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக புலம் பெயர் மற்றும்,உள்ளூர் உறவுகளின் நிதிப் பங்களிப்புடன் மின்மயானத்தை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தலைமையில் இது தொடர்பான கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.** கூட்டத்தில் அபிவிருத்திக் குழுவின் தலைவராக சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் ந.சிவபாலன், உப தலைவராக சாவகச்சேரி பிரதேச சபையின் உப தவிசாளர் செ.மயூரன், செயலாளராக நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் உட்பட 17 பேர் கொண்ட குழு தெரிவு செய்யப்பட்டது.மின் தகன மயானம் அமைக்க 15 மில்லியன் ரூபா தேவையான நிலையில் தற்போது 1.8 மில்லியன் ரூபா (18 லட்சம்) நிதி சேகரிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.
மறைந்த ரவிராஜ் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த போது 2005ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்ட நிதியில் மின் தகன மயானத்துக்கென ஆரம்பக் கட்ட நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றன. அவர் கொல்லப்பட்டதையடுத்து அந்தக் கட்டடம் நகரசபையின் மேலதிக நிதியைக் கொண்டு மண்டபமாக மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
(வ-9,131)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம். அச்சுவேலி பத்தைமேனி பகுதியில் 24 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. 1 பரப்பின் விலை - 3.5 லட்சம் (மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா). 15 அடி பாதையுடன் காபெட் றோட், நல்ல சூழல், நிலப்பரப்பு
(அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து 2 KM தூரம்).
அச்சுவேலியிலிருந்து பலாலி செல்லும் வீதியில் தோலகட்டி கொம்பனிக்கு முன்வீதி.
தொடர்பு:-**076 890 9259, 077 015 0353**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி வடக்கில் தபால் நிலையம் அரு காமையில் 9 நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பன்னக்கு உண்டு.
1 பரப்பின் விலை - 120,000 (ஒருலட்சத்து இருபதாயிரம்)
(கைதடி சந்தியிலிருந்து 2 km தூரம்)
தொடர்பு:
**077 288 0152, 077 911 6983, 076 405 3965**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் சுன்னாகம் சந்தியிலிருந்து புன்னாலைக் கட்டுவன் வீதியில் மெயின் றோட்டில் இரண்டாவது காணி கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 8 1/2 பரப்புக் காணி 2 பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
(சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து 2.5 KM தூரம்)
**077 65 85 999**

## துரித பொதிகள் சேவை

உள்நாடு வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
**11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகை**
France : 1400/=
Germany : 1250/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, யாழ்ப்பாணம்.
**0777 554528**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A-9 பிரதான வீதியுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு) கைதடிப்பிள்ளையார் கோயிலில் இருந்து 500m தூரம்.
**பார்வையிடும் நேரம்:**
காலை 6.00 முதல் மாலை 6.00 மணிவரை
தரகர் தேவையில்லை, விலை நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.
(CS 42488) (2.6)
தொடர்பு: **077 814 7389, 077 614 7333**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.